லை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

க்கங்கள்: இருபது — Valampurii

13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 30 செவ்வாய்க்கிழமை (16.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக் கோருகிறார் ஜெயலலிதா

## நா. தீர்மானத்தை ஆதரிக்கவும் வேண்டுகோள்



(சென்னை)

ஈழத் தமிழர்களை படுகொலை செய்த இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஜெனிவா மனித வுரிமைகள் கூட்டத் தொடரில் கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்றும் சர்வதேச நாடுகள் இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்றும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பாக். தூதுவர் மீள அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்தபடியே இந்தியாவில் உளவு வேலை பார்த்த பாகிஸ்தான் தூதுவர் சித்திக்கை அந்த நாட்டு அரசு திரும்பப் பெற்றது.

அதனையடுத்து பாகிஸ்தான், இலங்கைக்கான உயர் ஸ்தானிகராக புதிய ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலிருந்து வரும் அகதிகளுக்கு ஆபத்து

### கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

மிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் கள் மீண்டும் நாடு திரும்பும் போது களில் பலர் கைது செய்யப்பட்டு துன் தப்படும் அபாயம் இருப்பதாக தமிழ்த் யக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

மிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது இந்திய விஜயத்தின் போது இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனை சந்தித்து இது தொடர்பில் விளக்கமளித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இலங்கைக்கு திரும்பி வருகின்ற அகதிகளின் முழுமையான பாதுகாப்பிற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமரின் கருத்துக்கு கலைஞர் கருணாநிதி வரவேற்பு

(சென்னை)

இலங்கைத்தமிழர்கள்குறித்து இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் வெளியிட்ட கருத்து மனநிறைவை ஏற்படுத்துவதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளரிடம் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்த போது இலங்கையில் தமிழ் மக்கள் சுய கௌரவத்துடனும் சம உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருப்பதாக மன்மோகன் சிங் தெரிவித்திருந்தார். இந்த நிலைப்பாட்டையே டெசோ மாநாட்டின் தீர்மானமும் உள்ளடக்கியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைத் தமிழர்களுக்காக இந்தியாவும் ஐக்கிய நாடுகள் சபையும் தமது பங்கினை சரியாக செய்தாலே இலங்கை தமிழர்களின் பிரச்சினை தீர்ந்து விட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## க்குதலை விசாரிக்க விசேட குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்த ர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் டர்பில் விசாரணை நடத்துவதற்காக சட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இந்த ட குழு தமது விசாரணைகளை ஆரம் ள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ட்டவிரோதமான முறையில் நல்லூர் பிரதேச க்கு உட்பட்ட காணிகளை அபகரிக்கும் டிக்கைக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## திவி நெகும சட்டமூலம்

## அரசாங்கத் தரப்பு வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் திவிநெகும சட்டத்தின் நிறைவேற்றம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையின் போது இலங்கை அரசின் சார்பில் சட்டமா அதிபர் முன்வைத்த ஆட்சேபனையை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வடக்கு மாகாணசபை இன்னும் அமைக்கப்படாதுள்ள நிலையில், அதன் ஆளுநருக்கு திவிநெகும சட்ட மூலத்துக்கு அனுமதி வழங்க அதிகாரம் இருக்கின்றதா என்ற விசாரணையை உச்ச நீதிமன்றம் மேற்கொள்ள முடியாது என்ற சட்டமா அதிபரின் ஆட்சேபனையே உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அந்த வழக்கின் விசாரணையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சொல்ஹெய்ம் புதுடில்லிக்கு விஜயம்

(புதுடில்லி)

இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் தானத் தூதுவரும் அமைச்சருமான எரிக் ஹெய்ம் புதுடில்லிக்கு விஜயம் செய்துள் நோர்வேயிலிருந்து புறப்பட்ட அவர் நேற்று புதுடில்லியை சென்றடைந்துள்ளார். வர் இந்திய அதிகாரிகளுடன் இலங்கை ரம் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்து ன தெரிவிக்கப்படுகின்றது. தமிழ்த் தேசி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தூதுக்குழுவினர் புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள நிலையில் எரிக் சொல்ஹெய்மும் அங்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற சமயம் சமாதானத்தூதுவராக கடமையாற்றிய எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசாங்கம்-விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் புதுடில்லிக் (20ஆம் பக்கம் பார்க்க)

### தவிசாளர் தாக்கப்பட்டதை கண்டித்து

## நல்லூர் பிரதேச சபைக்கு முன் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் ப.வசந்த குமார் மீதான தாக்குதலைக் கண்டித்து நேற்று நல்லூர் பிரதேசசபை முன்பாக சபையின் ஏனைய உறுப்பினர்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் மீது நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் நடைபெற்ற பகுதியில் நான் தனிமையை உணர்ந்தேன்

## ஒலிவியா அகஸ்ரின் தெரிவிப்பு

வடக்கில் யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களி னூடாக வரும் போது எல்லாம் வெட்டவெளி யாகக் காணப்பட்டது. அங்கு நான் தனிமை யினை உணர்ந்தேன் என கனேடிய நாட்டுப் பிரஜையும் சமூக சேவையாளியுமான திருமதி ஒலிவியா அகஸ்ரின் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலைகளின் போதும் எதிர்பாராத விபத்து மற்றும் நோய்க ளின் போதும் அவயங்களை இழந்தவர்க ளுக்கு உதவும் நோக்குடன் மாத்தறை தேவாந் திரமுனையிலிருந்து பருத்தித்துறை முனை வரையான தொலைதூர நடைபயணத்தினை மேற்கொண்டிருந்தார் ஒலிவியா அகஸ்ரின்.

கடந்த மாதம் 22ஆம் திகதி ஆரம்பித்த இவ ரது பயணம் இன்று பருத்தித்துறையில் முடிப டையவுள்ள நிலையில் நேற்றைய தினம் அவர் யாழ்ஜெய்பூர்நிறுவனத்திற்குவருகைதந்திருந்தார்.

அவருடனான ஊடகவியலாளர் சந்திப்பி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித நேயம் என்று எல்லோரும் சுலபத்தில் கதைத்துவிட முடியும். அவர்கள் தமக்குள் கதை ப்பதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பயன் ஏது மில்லை. என்னால் நடக்க முடிந்தது. அதனால் கிடைக்கும் நிதியின் மூலம் அவயங்களை இழந் தவர்களுக்கு உதவ முயன்றேன். தற்போது அது நிறைவேறியுள்ளது. எனது நடைப் பய ணத்தின் போது நான் பல அனுபவங்களை வெவ்வேறாக ஒவ்வொரு இடங்களிலும் பெற் றுக் கொண்டேன்.

மேலும் இவரது நடைப்பயணத்தின் போது கிடைக்கப்பெற்ற நிதி யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (எ-4)

# சு.பவின் வீட்டில் கே.பி. குடியேறினார்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன் னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் வீட்டில், தமிழீழ விடு தலைப் புலிகளின முன்னாள் சர்வதேச விவ காரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி. குடியேறியுள்ளார்.

குமரன் பத்மநாதன் நெர்நோடோ என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தை வழிநடத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் அமைந்துள்ள இரட்டைமாடி வீட்டில் தமிழ்ச் செல்வன் தங்கியிருந்ததுடன், கட்டடத்தின் ஒரு பகுதியை தனது அலுவலகமாகவும் தமிழ்ச் செல்வன் பயன்படுத்தியிருந்தார். இந்தக் கட்டடத்தின் கூட்ட அறையில் சுமார் 175-200 பேர் வரையில் ஒன்றாக அமரக் கூடிய இடவசதி காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (எ-11)

# தவிசாளர் மீதான தாக்குதலுக்கு அரசியல் தலைவர்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் பரம லிங்கம் வசந்தகுமார் மீதான தாக்குதலைக் கண்டித்து அரசியல் தலைவர்கள் தமது கண் டனத்தை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பி னர் மாவை சேனாதிராஜா வெளியிட்ட கண்டன அறிக்கையில்,

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கொக்கு வில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த நால் வரினால் கொலைவெறியுடன் தாக்கப் பட்டு யாழ் மருந்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள் ளார். இச்செயல் ஒரு திட்டமிட்ட செயலாகும்.

நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான, பூங்காவுக்கான நிலம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக நல்லூர் பிரதேச சபையின் தீர்மானத்தின்படி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவே சபையின் தலைவர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். காவல் துறையின் விசார ணைக்குச் சென்று திரும்பிய போதே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இச்செயல் இராணுவ ஆக்கிரமிப்பாளர்க ளும் அரசின் அடியாட்களுமே செய்திருக்க வேண்டும். இச் செயலுக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் தலைவருக்கு ஏற் பட்ட இச் செயலை அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும், ஜனநாயக சக்திகளும் கண் டிக்க வேண்டும் என்றுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் மு.ஆ.வே. ஆனைமுகனின் கண்டன அறிக் கையில்,

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பரம லிங்கம் வசந்தகுமார் மீது ஞாயிறு அன்று நடத்தப்பட்ட தாக்குதலானது ஒட்டு மொத்த தமிழ் மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள் தள்ளியுள்ளது.

கடந்த சில தினங்களாக கலாசாலை வீதி யில் உள்ள பிரதேச சபை காணியை இராணு வம் அபகரித்து அங்கு முகாம் அமைப்பதை இட்டு பிரதேசசபை சட்ட நடவடிக்கைக்காக தயாரான நிலையில் தலைவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒட்டு மொத்த தமிழ் இனத்தையும் அதிர்ச்சிக்குள் தள்ளியுள்ளது.

ஆகவே தலைவர் மீதான தாக்குதலை மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன் தாக்குதலாளிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்து கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ)

# விவசாய சேவையாளர் முதலியார் காலமானார்

(யாழ்ப்பாணம்)

பன்முக சேவையாளன் தேசகீர்த்தி சீ.பொ.வ.மா.க. முதலியார் (ச.நீ) நேற்று முன்தினம் நண்பகல் 12.45 மணியளவில் காலமானார்.


கடந்த50 வருடங்களுக்கு மேலாக வட பகுதி மற்றும் நாடு தழுவிய விவசாயிகளின் நலனுக்காகவும் - வளர்ச்சிக்காகவும் அய ராது உழைத்தவர் அவர்.

மானிப்பாய் பிரதேச சபையின் முன் னாள் தவிசாளரான முதலியார் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலை வராகவும் மானிப்பாய் மேற்கு கிராம அபிவிரு த்திசங்கத்தின்தலைவ ராகவும் யாழ். மாவ ட்ட தேசவள விவ சாயிகள் சம்மேள னத்தின் தலைவரா கவும் இறுதி வரை சேவையாற்றியவர்.

மானிப்பாய் கட் டுடை யைச் சேர்ந்த இவரின் இறுதிக் கிரி யைகள்மானிப்பாயில் நடைபெறும். (நு)

# மரண அறிவித்தல்கள்

## பாலகிருஷ்ணன் இராசலிங்கம்



"சிவகிரி", வதிரி கர வெட்டியைப் பிறப்பிட மாகவும், பிரான்சை வசிப் பிடமாகவும் கொண்ட பால கிருஷ்ணன் இராசலிங் கம் அவர்கள் 10.10.2012 புதன்கிழமை காலமா னார்.

அன்னார் அமரர் பால கிருஷ்ணன் பொன்னம் மாவின் பாசமிகு மக னும், சிவனேஸ்வரி (கனடா), அன்னலக்ஷ்மி ஆகியோரின் தம்பியும் இராதாகிருஷ்ணன் (கனடா), கணேசலிங்கம் (கனடா) ஆகியோரின் அண்ணாவும் இராசமல ரின் பாசமிகு கணவரும் கலைப்பிரியா, தர்ஷிகா, நிரோஷா ஆகியோரின் தந்தையாரும் ஜீவாவின் (பிரான்ஸ்) மாமனாரும், அருமைநாயகம், விக்னேஸ் வரன், மகேஸ்வரன், இராசேஸ்வரன், சோதிமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2012இல் இலங்கை நேரப்படி பிற்பகல் 6.30 மணியளவில் பிரான்சில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சீனாப்புலம்,
நெல்லியடி வடக்கு, கரவெட்டி.

தகவல்:-குடும்பத்தினர்
0776052492

(C-1317)

## திருமதி வைத்திலிங்கம் சீவரத்தினம்



கற்கோவளம், பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சீவரத்தினம் அவர்கள் 14.10.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் அமரர்களான வல்லிபுரம்-மீனாட்சி தம்பதியினரின் மகளும் அமரர்களான சிதம்பரப் பிள்ளை-காளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் அனந்தராசா (மடாதிபதி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமம்), லிங்கமலர், ஸ்ரீரங்கன், பாலசுரேஷ், சபாநாயகம், லலிதாமலர், அனுசாமலர், உதயநேசன் (நிலஅளவைத் திணைக்களம்), நவதரன் (மூன்றாம் வருட கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2012) காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பருத்தித்துறை வெளிச்சவீட்டிற்கு அருகாமையில் உள்ள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்கோவளம், பருத்தித்துறை.

தகவல்:-குடும்பத்தினர்

(C-1319)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




10.30, 2.30, 6.30, 9.30



## வேலை வெற்றிடம்

**வேலைவாய்ப்பிற்கு காத்திருக்கும் O/L, A/L முடித்த ஆண், பெண் இருபாலாருக்கும் ஓர் அரிய வாய்ப்பு.**

உலகளாவிய ரீதியில் தன் கிளையினை பரப்பிக்கொண்டிருக் கும் "One World", இனோவெச் நிறுவனத்தின் வவுனியா கிளைக்கு பல்வேறு பகுதிகளில் 6 மாதகால பயிற்சியுடன் தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் 12,000/-, பயிற்சியின் பின் 35,000 - 40,000/- வருமானம் பெறமுடியும். விண்ணப்பதாரர்கள் **077-4122203, 024-7900171** தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளவும். முதல் பதிவு செய்யும் 20 பதிவாளர்களுக்கு தங்குமிடம் உட்பட பல சலுகைகள் இலவசம் (கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதியினருக்கு முன்னுரிமை.)

(763)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் **163** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவன்

**தவராசா தர்சன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன் **114** புள்ளிகளைப் பெற்ற

**இராசரத்தினம் நிதர்சன்**

**104** புள்ளிகளைப் பெற்ற

**ஆனந்தராஜா கேதுசன்** அவர்களையும்

இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்

**திருமதி வசந்தமலர் மதுசூதனன்**

அவர்களையும் பாராட்டுகின்றோம்.



தவராசா தர்சன்
163 புள்ளிகள்

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்
யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்

(762)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சிறுவர் உளவியல்

குழந்தைகள் விடயத்திலே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பெற்றோருக்கு இது தொடர்பான விடயம் சரியாகத் தெரிவதில்லை. பெற்றோர் சரியாக இல்லையென்றால் குழந்தைகளுக்கு பலவிதமான மனோதத்துவ நோய்கள் வந்து விடும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

குழந்தைகளிடம் அன்பை வெளிக்காட்டுங்கள். வேண்டாம் என்று கூறவில்லை... அந்த அன்பு மென்மையாக இருக்கட்டும்.முரட்டுத்தனமாக இருக்க வேண்டாம். "என் கண்ணே!" என்று சொல்லிக் கொண்டு பல்லை நறுமிக்கொண்டு சில பெற்றோர் குழந்தைகளிடம் போவார்கள்- அவ்வளவுதான் அழுத்தமான அன்பு.

முரட்டுத்தனமான அன்பை குழந்தைகளிடம் திணிக்கும் போது அதனுடைய உடல் கெட்டுப் போகும். மனதில் ஒருவகை பதற்றம் தோன்றும். உடல்நிலை சந்தோசம் அற்று இருக்கும்.

ஒரு பன்னிரெண்டு வயது சிறுமி, அடிக்கடி மயக்கம், வாந்தி, இவ்வாறு பல நோய்கள். பல வைத்தியரையும் நாடியும் நோய் தீருவதாக இல்லை. எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

இதற்குக் காரணம் என்ன என்பதை பெற்றோர் நீண்ட நாட்களுக்கு பின்புதான் கண்டுபிடித்தார்கள்.

அந்தச் சிறுமியின் பெற்றோர் அடிக்கடி சண்டை பிடிப்பார்கள். அதை அவதானிக்கும் போதெல்லாம் இந்தக் குழந்தைக்கு வாந்திவந்து விடும்; மயக்கம் வந்து விடும். ஏதோவெல்லாம் பேச ஆரம்பித்து விடும். இரண்டு, மூன்று நாட்களுக்கு சிறுமியின் கதை மாறாது. பின்னர் படிப்படியாக சரியாகப் போய் விடும்.

பெற்றோர் சண்டைபிடிப்பதனால் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லாத உணர்வு, பயம் இவை அனைத்தும் மனதிலே தங்கிவிடும். இதனால் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவு குறையும்; அன்பு இல்லாது போய்விடும். பொறுப்புணர்வு ஏற்படாது. இதனால் மனநோய், உடல் நோய் இவை இரண்டும் வந்து விடும்.

இதேபோல் இன்னொரு குழந்தை சிறுவயதிலே ஆரோக்கியமாகத்தான் இருந்தது. வாலிப பருவத்தை அடையும்போது ஆஸ்துமா நோய் அவனை பீடித்துக் கொண்டது.

ஆனால், அவர்களது குடும்பத்தில் இந்நோய் யாருக்கும் கிடையாது.

இதற்கு என்ன காரணம் என்பதை பின்புதான் கண்டுபிடித்தார்கள்.

அவனது பெற்றோரின் வன்மையான கண்டுபிடிப்பு. அவனை கட்டுப்படுத்தி வளர்க்க வேண்டும் என்று நினைத்து அதிகாரத்தை அவன் மேலே திணித்துள்ளார்கள்.

"மூடு வாயை... சத்தம் வெளியே வரக்கூடாது..." அப்படி உரத்த தொனியில் பயமுறுத்தி, அவனது அழுகையை சிறுவயதினில் இருந்து அடக்கிவிட்டார்கள். அதன்பின்னர் கூட அவன் அழ வேண்டிய விடயம் ஏதும் ஏற்பட்டால் முடியாது திண்டாடுவான். மனதினுள் வேதனை முட்டிய போதும் அழ முடியாது கஷ்டப்படுவான். கண்ணிலே கண்ணீர் வெளிவராது. கடைசியிலே அது ஆஸ்துமா நோயாக உருவெடுத்தது.

ஒரு குழந்தை அழுதா... "இதுக்கெல்லாம் போய் அழுவார்களா... இது சிறிய விடயம்" என்று பக்குவமாக எடுத்துக்கூற வேண்டும். அதுதான் நல்லது. அதுதான் தாயன்பு.

பிள்ளையைப் பெற்றெடுத்தால் மட்டும் போதாது. அக்குழந்தையை ஆரம்பத்தில் இருந்தே அன்பாக வளர்த்தெடுக்க பெற்றோர் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு பெண் தாய்மை அடைவது என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட வரம். அதிலும் அறிவுள்ள பிள்ளைகளை வளர்த்தெடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வைத்தியர் பற்றாக்குறையால் அல்லற்படும் நெட்டாங்கண்டல்

(முல்லைத்தீவு)

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நெட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் அவதியுற்று வருகின்றனர்.

மேற்குறித்த பிரதேச வைத்தியசாலையில் 15 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இக்கிராமங்களில் கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரை நிரந்தர வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒப்பந்த அடிப்படையில் ஒரு வைத்தியரே இவ் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட போதும் ஒப்பந்த காலம் கடந்த 13 ஆம் திகதியுடன் முடிவுற்றுள்ளது.

இதனால் அவ்வைத்தியரிடமும் வைத்திய சேவையையும் பெற முடியாதநிலை உள்ளது.

இவ்வைத்தியசாலையானது 60 வருடகால பழைமைவாய்ந்த வைத்தியசாலையாகவும் ஒரு நாளைக்கு 70 இற்கும் மேற்பட்ட வெளி நோயாளர்கள் வருகை தந்து சிகிச்சை பெற்றுச்செல்கின்ற வைத்தியசாலையாகவும் உள்ளது.

அத்துடன் 20 இற்கும் மேற்பட்டோர் தங்கி நின்று சிகிச்சையும் பெறமுடியும்.

இவ்வைத்தியசாலைக்கு மின்சாரம் இன்மை பெரியதொரு குறைபாடாக காணப்படுகின்றது.

இவ்வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இன்மையால் மல்லாவி வைத்தியசாலை, மாங்குளம் வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளுக்கே நோயாளர்கள் பணத்தினை செலவு செய்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இம்மக்கள் வறுமைக் கோட்டின் கீழ்உள்ள மக்களாக காணப்படுகின்ற வேளையில் பணத்தினை செலவு செய்து நீண்டதூர வைத்தியசாலைக்கு செல்வதென்பது இலகுவான விடயம் இல்லை.

எனவே, மழை காலத்திற்கு முன் தமது நலனைக் கருத்திற் கொண்டு மேற்குறித்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து தமது வைத்திய சேவையை பூர்த்திசெய்ய ஆவனசெய்யுமாறு அப்பகுதி நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முன் பள்ளிக்கல்விச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் முதலாம் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந் தவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30-50 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 70 |
| தக்காளி | 30 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 80 | 60 | 80 |
| கரட் | 70 | 100 | 130 |
| பூசணி | 30 | 35-40 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 30 | 25-30 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 50 | 75 |
| பெரிய வெங்காயம் | 40 | 40-60 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 70 |
| பயற்றங்காய் | 20 | 20-30 | 80 |
| லீக்ஸ் | 110 | 80 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 60 | 30 | 40 |
| போஞ்சி | 110 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 20-30 | -- | 40 |
| கீரை (பிடி) | 20 | 10-20 | 20 |
| தேசிக்காய் | 200 | 250-300 | 360 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 25-35 | 28-30 |

# இராசி பலன்

16.10.2012
(புரட்டாதி 30, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பிரதமை பிற்பகல் 4.26 மணிவரை
சித்திரை முற்பகல் 9.01 மணிவரை
இராகுகாலம் 3.02-4.23 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
நவராத்திரி விரதாரம்பம்.

**மேடம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**இடபம்** தொழிலில் இருந்த குழப்பங்கள் அகலும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசும் சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பிறருக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்து மகிழ்வீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**சிங்கம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் இருந்த மனஸ்தாபங்கள் அகலும், நண்பர்கள் வலிய வந்து உதவுவர்.

**கன்னி** சுய முற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், சேமிக்கும் தன்மை அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** திட்டமிட்ட காரியமொன்று நடைபெறாவிட்டாலும் திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறலாம், உறவினர் நலன் கருதி சில அலைச்சல்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,சயன சுகக் குறைவான நாள்,செலவுகள் செய்து மகிழும் நாள்,தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்,எடுத்த காரியங்களை எளிதில் நிறைவேற்றி வெற்றி காண்பீர்கள், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விரதம், வழிபாடுகளில் அதிகம் நம்பிக்கை வைப்பீர்கள், உற்சாகமான நாள்.

**கும்பம்** சில கட்டுப்பாடுகள் ஏற்படலாம், அலுவலக பணிகள் துரிதமாக இடம்பெறலாம்,தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள்.

**மீனம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், வேலைச்சுமை அதிகரிக்கும், பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

வளவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நான்கு மாணவிகள் தேசிய மட்டத்திற்கு தெரிவு

(கரவெட்டி)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலையில் இருந்து 4 மாணவிகள் தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.


வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப்போட்டிகள் அண்மையில் கிளிநொச்சி, சென் திரேசா சாவகச்சேரி இந்துக்கல்லூரி பாடசாலைகளில் நடைபெற்றது.

இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 4 வகுப்பு பிரிவினர் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

இதில் தரம் 7 இல் யோகேந்திரன் சாம்பவி, கதை கூறல், எழுத்தாக்கத்திறன் போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களையும் தரம் 8 இல் குகனேசன் நிதுஷா சொல்வதெழுதல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் தரம் 8 இல் புலேந்திரம் தேனுஜா கவிதை கூறல் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் தரம் 9 இல் குமுக்கேசன் மாதுவை சொல்வதெழுதல் போட்டியில் முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

தரம் 13 இல் ஐங்கரதாஸ் சந்திரிக்கா பார்த்தெழுதல் போட்டியில் 3 இடத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

முதலாம், இரண்டாம் இடங்களை பெற்ற மாணவிகள் தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். (அ-3-24)



நன்றி:ஜலன்ட்

## சிறார்களுக்கான போட்டி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சங்கானை Butterfly International school இல் நவராத்திரியை முன்னிட்டு சிறார்களுக்கான போட்டிகள் நடாத்தப் படவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதற்கமைய நாளை புதன்கிழமை கோலப் போட்டியும் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை கட்டுதல் போட்டியும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேவாரப் போட்டியும் நடைபெறவுள்ளது.

இதற்கமைய மாணவர்களை முன் ஆயத்தத்துடன் அனுப்பி வைக்குமாறு கல்லூரியின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-9)

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலகத்தினரால் நவராத்திரி ஆரம்ப தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு கருத்தரங்கு நிகழ்த்தப்படவுள்ளது.

"அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என்ற தலைப்பில் தென்மராட்சி இலக் கிய மன்ற வளவாளர் வாசுதேவவினால் நிகழ்த்தப்படவுள்ளது. (அ-3-29)

## விரிவுரைகள் ஆரம்பம்

உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் 2011/12 கல்வியாண்டுக்குரிய அனைத்துக் கற்கைநெறிகளுக்குமான முதலாம் அரையாண்டுக்குரிய விரிவுரைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 8.30 மணிக்கு நடைபெறுமென பீடாதிபதி பேராசிரியர் சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

மேலும் இக்கற்கை நெறிகளை தொடரும் அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

# பல அறிஞர்களை உருவாக்கிய மாவட்டம் யாழ்ப்பாணம்

## அமைச்சர் கரலியத்த பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

பலநூறு கல்விமான்களைப் பெற்றுத் தந்த யாழ்பபாணத்திற்கு வந்ததில் நான் பெருமையடைகிறேன். என சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான கௌரவிப்பு நிகழ்வு யூ.ஆர். பிரன்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலை அதிபர் சு.சிவபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், யாழ்ப்பாணத்தில் கல்வி சிறந்த நிலையில் உள்ளது. எனது உறவினர்களும் யாழிலே கல்விகற்று தற்போது நல்ல நிலையில் உள்ளனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் எமது நாட்டிற்கு பல நூறு அறிஞர்களையும் கல்விமான்களையும் பெற்றுத்தந்துள்ளது.

நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தினையடுத்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது கல்வி நிலையே. இங்குள்ள நிறுவனங்கள் இவ்வாறான நிகழ்வுகளை தொடர்ந்து நடத்தி ஊக்குவிக்க வேண்டும்.

எனது அமைச்சு பல சிக்கல்கள் நிறைந்த அமைச்சாகும். பெண்கள், சிறுவர்கள் பிரச்சினைகள் என நாளாந்தம் நாட்டில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான செயற்பாடுகளை எதிர்கொள்வதற்கு நாம் எந்நேரமும் தயாராக இருக்க வேண்டும்.

இன்று இப்பாடசாலையில் மாணவன் ஒருவன் சித்தியடைந்துள்ளான். அது நாளை இரண்டாகி பல்கிப் பெருக வேண்டும்.

நாளையதினம் எமது கைகளிலேயே தங்கியுள்ளது என்பதனை மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது மனங்களிலே நிறுத்தி செயற்பட்டால் வெற்றியினை எமதாக்கிக் கொள்ள முடியும் என்றார்.

மேலும் குறித்த நிகழ்வில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை தரம் 4 மாணவர்களினால் சேமிக்கப்பட்ட உண்டியல் பணம் நாவலர் வித்தியாலயத்தில் சித்தியெய்திய மாணவன் குமரகுலசிங்கம் ஜிந்தனுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)




## விசேட அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விரதத்தை முன்னிட்டு தினமும் காலை 8 மணி முதல் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசைகளும் நடைபெறும். மாலை 5 மணிக்கு கொலுப்பூசைகள் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவல்ர் மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவ்ரை நடைபெறவுள்ளது.

நாளை புதன் கிழமை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வில் லக்சுமி கடாட்சம் எனும் தலைப்பில் சைவப்புலவர் எஸ்.பாலச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் சித்தங்கேணி சிவசக்தி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-9)

## நாடகப் போட்டியில் சாதனை

கொழும்பு பல்கலைக்கழகம், தமிழ்ச்சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்திய நாடகப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் நாடகம் சிறந்த நாடகமாக தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு சாதனை பெற்றுள்ளதாக யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

சிறந்த நடிகராக இக்கல்லூரியைச் சேர்ந்த மாணவன் டேவிட் சாள்ஸ் டான் ஜஹறனும் சிறந்த துணை நடிகராக விமலாஜா வருண்ராஜ் ஆகியோர் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நாடகத்தை கல்லூரியின் நாடக ஆசிரியர் ஜேசுதாசன் இக்னேஷியஸ் பிரபா நெறியாள்கை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)





யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் சர்வதேச ஆசிரியர்தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் உட்பட அதிபர், ஆசிரியர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திருமதி வி.சுகுமாரன் ஆசிரியை ஒருவருக்கு நினைவுப்பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று அமைச்சுக்களின் பொறுப்பை ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்

## ஊவா மாகாணசபை முதலமைச்சர் தெரிவிப்பு

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோரின் அமைச்சுப் பத விகளை ஜனாதிபதியே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென ஊவா மாகாண சபையின் முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ கோரியுள்ளார்.

வெலிமட பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியா கவே கோரியிருந்தேன். போர் நிறைவடைந்துள்ள காரணத்தினால் பாதுகாப்பு அமைச்சு வேறு யாரிடமாவது ஒப்படைக்க முடியும்.

நாட்டின் அநேகபாதைகள்"அமைக்கப்பட்டுள்ளதனால் பெருந் தெருக்கள் அமைச்சுயாருக்காவது வழங்கப்பட முடியும். கல்வி, உயர்கல்வி மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் எடுக்கும் தீர்மானங்களின் விளை வுகள் சில ஆண்டுகளின் பின்னரே வெளியாகும். கல்வி தொடர்பில் நீங்கள் எடுக்கும் எந்த வொரு தீர்மானத்திற்கும் ஆதரவளிப்போம்.

எனினும், இவை நாட்டுக்கு பயனுள்ள தாக அமைய வேண்டும். பாதகமான தீர்மா னங்களுக்கு உதவியளிக்கமாட்டாது என சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிறந்த ஆசிரியருக்கான பிரதீபா பிரபா விருதைப் பெற்ற எமது மு/வற்றாப்பளை ம.வி. ஆசிரியரும் எமது பரிபாலன சபையின் பொருளாளருமான திரு. இ.சபேசன் அவர்களை பாராட்டி அவரின் சேவை மென்மேலும் சிறக்க வற்றாப்பளை கண்ணகியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/1312)

பரிபாலன சபை,
வற்றாப்பளைக் கண்ணகியம்மன் ஆலயம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்




சிறந்த ஆசிரியருக்கான பிரதீபா பிரபா விருதைப் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி. கனகராசா சுகந்தினி அவர்களின் சேவை மென்மேலும் சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி/1313)

பாடசாலைச் சமூகம்
மு/கலைமகள் வித்தியாலயம்,
முல்லைத்தீவு



பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம்
B.A. Dip in Ed. SLTS-2-II
மு/ஐயங்கன்குளம் அ.த.க.பாடசாலை

துணுக்காய் வலயத்தின் சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு மிப்பே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் (CELD) அதி மேதகு ஜனாதிபதியிடம் பிரதீபா பிரபா விருது பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(758)

மாமா, மாமி, மைத்துனர் மற்றும் தி...


# ஆதாரத்துடன் வெளிவருகிறது "தமிழினப் படுகொலைகள் நூல்"



(கொழும்பு)

உலகளாவிய மிகப் பெரிய புத்தக கண்காட்சி விழா வில் வடகிழக்கு மனித உரிமை செய லகம் (NESoHR) தொகுத்து வெளி யிட்ட தமிழனப் படுகொலைகள் என்ற நூல் ஜேர்மன் மொழியில் (Damit wir nicht vegessen Massaker an Tamilen 1956-2008) எனும் தலைப்பில் நேற்றைய தினம் நகரில் வெளியிடப் பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரி யர் பீற்றர் சால்க் உரையாற்றுகையில்,

இலங்கை அரசு ஈழத்தமிழர்கள் மீது நடத்திய மனிதவுரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலைகள் இந்நூலில் ஆதாரத்துடன் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்வாறான குற்றங்கள் புரிந்த இலங்கை அரசை சர்வதேச சட்டங்களுக்கு அமைய அனைத்துலக குற்றவியல் மன்றத்தில் நிறுத்த முடியும் என இவ் ஆவணத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசால் இழைக் கப்பட்ட கொடுமைகள் இன்றுவரை அனைத்து நாட்டு மக்களும் ஆதாரப்படுத்தப்பட்ட வகையில் சென்றடையவில்லை. அதனால் இன்று வெளியிடப்படும் இந்நூலை மிக முக்கியமான ஒரு ஆவண மாக கருதுகின்ற வேளையில் இந்நூலை உருவாக்குவதற்கு தமது உயிர்களை அர்ப்பணித்தவர்களை நினைவில் பதித்து இதை ஜேர்மன் மொழியில் வெளியிட்டு வைப்பதற்கு மிகப் பெரும் உத வியை செய்த பேராசிரியர் பீற்றர் சால்க், அச்சுப் பதிவு செய்த நிறு வனத்தின் உரிமையாளர் கிறிஸ்டடியன் வைஸ் மற்றும் பெயர் குறிப்பிட முடியாத அனைவருக்கும் ஈழத்தமிழ் மக்கள் 'சார்பில் நன்றியை தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை அரசு ஈழத்தமிழர்கள் மீது 30 ஆண்டு களுக்கும் மேலாக திட்டமிட்ட இனப்படுகொலையை செய்து வருகின்றதை இந்நூல் ஆதாரத்துடன் வெளிக்காட்டுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# இளைஞனின் சடலம் மீட்பு

பொத்துவில் அறுகம்பே கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்றவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அந்த மீனவரின் கையில் இருந்த கயிறு அறுந்தமையின் காரணமாக அந்நபர் கடலில் வீழ்ந்துள்ளார். உயிரிழந்தவர் 22 வயதான வீரவில பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)


Cambridge Management College

OPEN DAY-21,22 October -2012

நேரம்- 9.00 முதல் 3.00 மணி வரை

யாழில் முதன் முறையாக UK இல் இருந்து வருகை தந்துள்ள ஆங்கிலேயர்களால் ஆங்கிலம் New Method இல் கற்பிக்கப்படுகின்றது.

Lecturers



Mr. Rob Horne
M.Phil in English
Qualified
Cambridge
Uni Examiner



Ms. Janette Smith
Master of
Education
(English)

தொழில் புரிவோர் (ஆசிரியர்கள், சட்டத்தரணிமார்கள், வர்த்தகர்கள்) பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள், வெளிநாடு செல்ல விரும்புவோர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


# ஆற்றில் வீழ்ந்து சிறுமி மரணம்

ஒலுவில் அஷ்ரப் நகர் பிரதேசத்தில் விறகு பறிப்பதற்காகச் சென்ற சிறுமி ஆற்றில் தவறி விழுந்து மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. அஷ்ரப் நகர் பிரதேசத்தில் விறகு பறிப்பதற் காகச் சென்ற குறித்த சிறுமி அருகிலிருந்த ஆற்றில் தவறிவிழுந்து காணாமல் போயிருந்தார். தேடுதலின் பின்னர் சிறுமியின் சடலம் நேற்று முன்தினம் இரவு கண்டெடுக்க ப்பட்டுள்ளது. (அ-2)


கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சித்திரை 4<br>உயரம்:-5'8"<br>கி.பா:-3.5<br>தொழில்:-பட்டதாரி ஆசிரியர்<br>B/562 | பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 3<br>உயரம்: 5'<br>கி.பா:-26.5, 8 இல் செவ்.<br>தகைமை:- அவுஸ்திரேலிய PR<br>G/221 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கேட்டை 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-13.75<br>தகைமை:-Executive Assistance (PVT Ltd)<br>B/564 | பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- விசாகம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா:-24.5<br>தகைமை: O/L<br>G/222 |
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி<br>உயரம்:-5'5"<br>கி.பா:-19.25, 12 இல் செவ்.<br>தொழில்:- கணித ஆசிரியர்<br>B/566 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>உயரம்: 5'7"<br>கி.பா: 33<br>தொழில்:-STATISTIC Phd அமெரிக்க மாணவி<br>G/224 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கேட்டை 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-37, 4 இல் செவ்.<br>தொழில்:-A/L UK PR<br>B/567 | பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 4<br>உயரம்: 5'5"<br>கி.பா: 6.25<br>தொழில்:- அரச வங்கி ஊழியர்<br>G/231 |


சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரங்களை பாதுகாக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்

## மனோ கணேசன் சந்தேசிய சேவைக்கு செவ்வி



(கொழும்பு)

அரசியலமைப்பு சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தை தமிழர்கள் அனுபவிக்க தடை போடுவதன்மூலம் அரசாங்க ஊழியரான பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது வரம்பை மீறி பேசுகிறார் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

லண்டன் பிபிசியின் சந்தேசிய சிங்கள வானொலி சேவைக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,

நீங்கள் உள்ளூராட்சி தேர்தல் முறைமை மாற்றம் பற்றி கேட்கின்றீர்கள். புதிய சட்டங்களை பற்றி கேட்கின்றீர்கள். எமக்கு இன்றுள்ள முதன்மை பிரச்சினை இதுவல்ல. ஜனாதிபதியின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ 13 ஆம் திருத்தத்தை அகற்ற வேண்டும் என்றும் மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டும் என்றும் பேசுகிறார்.

இவர் இதை எந்த அதிகாரத்தில் எவ்விதம் சொல்லுகிறார் என எனக்கு தெரியவில்லை. அவர் இன்னமும் ஒரு அரசு ஊழியர். ஆனால், அவர் தனது வரம்பை மீறி அரசியல்வாதியைப்போல் பேசுகிறார்.

இந்த கதைகளை பார்க்கும் போது உண்மையில் புதிய தேர்தல் முறைமையை கொண்டு வருவதற்கோ அல்லது புதிய சட்டங்களை கொண்டு வருவதற்கோ முன்னர் இருக்கும் சட்டங்களையும் அரசியலமைப்பில் இருக்கும் அதிகாரங்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய சிக்கல் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நாட்டில் வாழும் சிங்களவர் அல்லாத மக்களுக்கு குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளதை இந்த இடத்தில் சொல்லியே ஆக வேண்டும். விருப்பு வாக்குமுறைமை தீங்கானது என்று சொல்லி இந்த உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தை திருத்தி உள்ளார்கள்.

உண்மையில் அதுவல்ல இவர்களின் பிரதான நோக்கம். வட கிழக்குக்கு வெளியில் சிறுபான்மையினராக பல்லின சூழலில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவங்களை வெட்டி குறைப்பதே இவர்களது பிரதான நோக்கம்.

கடந்த தேர்தலின் போது கொழும்பு கொலன்னாவை பகுதியில் இரண்டு ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சுட்டுக்கொண்டார்கள். இதை அடுத்து இந்த விருப்பு வாக்கு முறைமையை மாற்ற வேண்டும் என்ற கூக்குரல் கூடியுள்ளது. விருப்பு வாக்குமுறையினால் ஒரே கட்சிக்குள் சச்சரவு ஏற்படுகிறது என சொல்கிறார்கள்.

உண்மையில் இது கட்சிகளின் ஒழுங்கு பிரச்சினை. ஒரே கட்சி என்றபடியால் கொலன்னாவையில் நான்கு பேர் உயிரிழந்தார்கள். அதுவே இரண்டு வெவ்வேறு ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளுக்கு இடையில் நடைபெற்று இருந்தால் நான்கு பேருக்கு பதில் நாற்பது பேர் உயிரிழந்து ஒழிந்திருப்பார்கள்.

எனவே, இந்த சண்டைகளுக்கு காரணம் விருப்பு வாக்கு என்பது அல்ல. இந்த நாட்டில் இன்று நிலவுகின்ற கொலைவெறி கலாசாரம் தான் அனைத்துக்கும் காரணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கூட்டமைப்பு முழு நாட்டையும் ஏமாற்ற நாம் இடமளிக்கமாட்டோம் - கெஹலிய

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு செல்வதன் மூலம் தாங்கள் மீண்டும் ஒருமுறை ஏமாற்றமடைய தயாரில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவிடம் தெரிவித்துள்ளனர். அவ்வாறெனின் கூட்டமைப்பினர் முழுநாட்டையும் ஏமாற்றுவதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியா சென்று திரும்பிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளுமாறு அரசு அழைப்பு விடுத்தாலும் நாம் அதில் இடம்பெற்று மீண்டும் ஒருமுறை ஏமாற்றமடையத் தயாரில்லை என தெரிவித்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தெரிவுக்குழுவே சிறந்த இடமாகும். யார் எதனை பேசினாலும் இறுதியில் பாராளுமன்றத்துக்கே செல்ல வேண்டும். இந்நிலையில் சுற்றி வளைத்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு செல்லாமல் நேரடியாகவே குழுவுக்கு செல்வதே யதார்த்தமானதாக இருக்கும்.

தெரிவுக்குழுவில் இடம்பெறாமல் கூட்டமைப்பினர் நாட்டை ஏமாற்றி வருவதாகவே உணர்கின்றோம். பாராளுமன்றம் என்பது இந்த நாட்டின் அதியுயர்ந்த நிறுவனமாகும்.

எனவே, தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான செயற்பாட்டு ரீதியாக மற்றும் யதார்த்த ரீதியான ஒரே இடமாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவே காணப்படுகிறது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்துக் கட்சிகளும் இடம்பெற்று தீர்வு குறித்து செயற்படுவதே சிறந்ததாகும்.

கூட்டமைப்பும் இதில் இடம்பெற வேண்டுமென்பதை நாம் ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்தி வருகிறோம். எனினும் கூட்டமைப்பினர் தெரிவுக்குழுவுக்கு இதுவரை தமது பிரதிநிதிகளை முன்மொழியாமல் இருக்கின்றனர்.

இந்நிலையில் இந்தியா சென்றிருந்த கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளுமாறு இந்தியப் பிரதிநிதிகள் வலியுறுத்தியிருப்பார்கள் என்று நம்புகின்றோம் என்றார். (அ-2)



டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக பிலிசரு செயற்றிட்டத்தின் அனுசரணையுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் நடத்தப்பட்ட டெங்குவை அழிப்போம்; நமது வாழ்க்கையை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வொன்று அண்மையில் உமை யாள்புரத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொறுப்பதிகாரிகள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், இராணுவப்படைப்பிரிவினர், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலர் பங்கேற்றதைப் படத்தில் காணலாம்.

## நாட்டை விட்டு வெளியேற நினைத்த 11 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்ல முயன்ற 11 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையால் கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் மாத்தறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குடாவெல்ல கடற்பரப்பிலிருந்து 93 மைல் தூரத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நாக்குலுகமுவ, குடாவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

## இரு பெண்கள் சென்னை விமான நிலையத்தில் தடுப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு பெண்கள் சென்னை விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

திருமணத்துக்காக இந்தியாவிற்குச் சென்ற யாழைச் சேர்ந்த சகோதரிகள் இருவரே நேற்று முன்தினம் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவருக்கு நேற்றைய தினம் சென்னையில் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவர்கள் முன்னரும் சுற்றுலா விசாவில் இந்தியா சென்று விசா முடிந்த பின்னரும் தங்கியிருந்த இவர்கள் பின்னர் இந்திய அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இதனால் அவர்களை விமான நிலையத்தை விட்டு வெளியேற அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அவர்கள் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## இலங்கை பிரஜை டுபாயில் கைது

(கொழும்பு)

டுபாய் விமான நிலையத்தில் வந்திறங்கிய சவுதி அரேபிய பெண்ணொருவரின் பயணப் பையை திருடியதாக கூறப்படும் இலங்கை பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

டுபாய் விமான நிலையத்தில் வந்திறங்கிய சவுதி அரேபியப் பெண்ணொருவர் விமான நிலையத்தில் இவரது காரை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு சென்றார். இப்பெண் தனது பயணப் பையை காரில் விட்டு இறங்கியபோது இச்சாரதி காரை விரைவாக எடுத்துக் கொண்டு சென்றுள்ளார்.

தனது பயணப்பை திருடப்பட்டுள்ளதாக அப்பெண் பொலிஸில் செய்த முறைப்பாட்டை யடுத்து ஒரு சில நாட்களின் பின் இச்சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

டுபாய் விமான நிலையத்தில் வாடகைக்கு அமர்த்தப்படும் கார்களை அவதானிப்பதற்கு நவீன தொழில்நுட்ப வசதிகளுள்ளன. இதனடிப்படையிலேயே இச்சாரதி கைது செய்யப்பட்டார்.

இப்பெண்ணின் பயணப்பையில் மடிக் கணனி, ஐபொட் கருவி, சுமார் 4 ஆயிரத்து 300 டினார் பணம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச கல்வியை பலப்படுத்தவே மஹிந்தோதய திட்டமாம்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

(கொழும்பு)

**இலவசக் கல்வியை மீண்டும் பலப்படுத்தி மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்கே அரசாங்கம் மஹிந்தோதய திட்டத்தை ஆரம்பித்திருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில்,

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் பாடசாலைகளில் மஹிந்தோதய திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். இலவசக் கல்வியை சீரழிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிப்பதாக சில சக்திகள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன.

எனினும் இலவசக் கல்வி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை மேலும் பலப்படுத்துவதற்கே அரசாங்கம் இவ்வாறான திட்டங்களை ஆரம்பித்துள்ளது. கல்வி முறையை சீரழிப்பதற்காக அல்ல என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மஹிந்தோதய திட்டம் முதற்கட்டமாக 409 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இலவசக் கல்வி உருவாக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் தொழில்முறையான கல்வி காணப்பட்டது. ஆனால், தற்போது அது அருகிவிட்டது. இந்த நிலையிலேயே மாணவர்களின் தொழில்நுட்பம், மொழி மற்றும் தொழிற்றுறை அறிவை விருத்தி செய்யும் நோக்கில்.மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

மஹிந்தோதய திட்டத்தின் கீழ் ஒரு பாடசாலைக்கு 40 கணனிகள் வீதம் 40 ஆயிரம் கணனிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கு தென்கொரிய அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளோம். இது மாத்திரமன்றி மாணவர்களுக்கான ஆங்கில, சிங்கள, தமிழ், கொரிய, சீன உள்ளிட்ட மொழி அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஆசிரியர்களையும் நாம் நியமிக்கவுள்ளோம்.

இந்தத் திட்டத்துக்கு ஆறரைக் கோடி ரூபா செலவிட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. முதற் கட்டப் பணம் 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அடுத்த கட்டத்துக்கான நிதி எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் 72 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொழில்சார் நிபுணர்கள் இல்லை. இவ்வாறான பகுதிகளில் 288 பாடசாலைகளில் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் அமைக்கப்படவுள்ளன. செலவுச் சிக்கனமான முறையில் கட்டடங்களை அமைத்துக் கொடுக்க முன்வரும் ஒப்பந்தகாரர்களுக்கே நாம் ஒப்பந்தங்களை வழங்குவோம் என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# அதிபர்கள், ஆசிரியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையில்?

(கொழும்பு)

அதிபர்களும் ஆசிரியர்களும் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு மற்றும் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கடந்த 15 ஆண்டுகளாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருவதாக அதிபர், ஆசிரியர் சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

கோரிக்கைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படாத காரணத்தினால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என 11 ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளன.

அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தாது ஏதேச்சாதிகார போக்கில் அமைச்சரும் செயலாளரும் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (அ-2)




★1775-ஐக்கிய அமெரிக்காவில் மேய்ன் மாநிலத்தின் போர்ட்லண்ட் நகரம் பிரித்தானியரால் எரிக்கப்பட்டது.

★1781-ஜோர்ஜ் வோஷிங்டன் வேர்ஜீனியாவின் யோர்க்டவுன் நகரைக் கைப்பற்றினார்.

★1793-பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனின் மனைவி மரீ அண்டொனெட் கழுத்து வெட்டி மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டாள்.

★1813-ஆறாவது கூட்டணி நாடுகள் நெப்போலியன் பொனபார்ட் மீது லீப்சிக் நகரில் தாக்குதலை ஆரம்பித்தன.

★1834-லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் தொன்மைப் பொருட்கள் பல எரிந்து சேதமடைந்தன.

★1905-ரஷ்ய இராணுவம் எஸ்தோனியாவில் மக்கள் கூட்டமொன்றின் மீது கூட்டத்தில் 94 பேர் உயிரிழந்தனர்.

★1905-பிரித்தானிய இந்தியாவில் வங்காளப் பிரிப்பு இடம்பெற்றது.

★1923-வால்ட் டிஸ்னி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

★1934-குவோமின்டாங்குகளுக்கு எதிரான சீனக் கம்யூனிஸ்டுகளின் தாக்குதல் ஆரம்பமானது.

★1939-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மீதான ஜேர்மனிய வான்படையின் முதலாவது தாக்குதல் இடம்பெற்றது.

★1942-மும்பையில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் 40 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★1949-கிரேக்க கம்யூனிசத் தலைவர் நிக்கலாஸ் சக்காரியாடிஸ் தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்தார். கிரேக்க உள்நாட்டுப் போர் முடிபுக்கு வந்தது.

★1951-பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் லியாகட் அலி கான் ராவல்பிண்டியில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

★1964-மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.

★1973-ஹென்றி கிசிங்கர் லே டுக் தோ அமைதிக்கான நோபல் பரிசு பெற்றனர்.

★1975-கிழக்குத் திமோரில் அவுஸ்திரேலிய தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் இந்தோனேசியப் படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★1984-தென்னாபிரிக்காவின் டெஸ்மண்ட் டுடு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.

★1987-தெற்கு இங்கிலாந்தில் இடம்பெற்ற சூறாவளியில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

★1996-குவாத்தமாலாவில் உதைபந்தாட்டப் போட்டி நிகழ்வில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 84 பேர் உயிரிழந்தனர்.

★1998- சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினொச்சே லண்டனில் கைது செய்யப்பட்டார்.

★2003-தமிழ் விக்கிப்பீடியாவில் முதலாவது கட்டுரை சிரின் எபாடி பற்றி எழுதப்பட்டது.

★2006- இலங்கையில் 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

**பிறப்புக்கள்**

★1854-ஆஸ்கார் வைல்டு, ஐரிய எழுத்தாளர் (இ.1900)

★1975-ஜாக் காலிஸ், தென்னாபிரிக்கத் துடுப்பாட்டக்காரர்

**இறப்புக்கள்**

★1799-கட்டபொம்மன். பாஞ்சாலங்குறிச்சி மன்னன் (பி.1760)

★1951-லியாகட் அலி கான், பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் (பி.1896)

**சிறப்பு நாள்**

★உலக உணவு தினம்

# பன்மொழி தெரிந்தவர்களையும் இணைத்துக் கொள்கிறது றோ

இந்திய மத்திய உளவுத்துறையான றோ, இந்தியாவின் அயல் நாடுகளில் பேசப்படும் சிங்களம் உட்பட்ட மொழிகள் தெரிந்தவர்களை உளவுத் துறையில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

தற்போது அயல் நாட்டு மொழி அறிவுடைய மிகச் சிலரே றோ உளவுத் துறையில் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களம் (இலங்கை), பாஸ்தோ (ஆப்கான்),தாரி ஆப்கான் மற்றும் ஈரானின் சில பகுதிகள்), மியன்மாரி (மியன்மார்), மான்டரின், கான்டனீஸ் (சீனா) ஆகிய மொழிகளை அறிந்தவர்கள் றோ அமைப்பில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள் என தெரியவருகிறது.

இவர்களில் சிங்களம் தெரிந்தவர்கள் தழிழகம் மற்றும் கேரளவிலும் மற்றைய மொழி அறிந்தவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் நியமனம் செய்யப்படவுள்ளனர் என அறியவந்துள்ளது. (அ-2)

# யுத்தத்தின் பின்னர் போதைப் பொருள் விநியோகம் அதிகரித்த நிலையில்

## போதைப்பொருள் கட்டுப்பாட்டு திணைக்களம் அறிவிப்பு

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்த மூன்று வருட காலப்பகுதியில் சட்ட விரோத போதைப் பொருள் விநியோக நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக அபாயகரமான போதைப் பொருள் கட்டுப்பாட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தவருடத்தின் ஜுன்மாதம்வரையில் மாத்திரம் இவ்வாறு போதைப் பொருட்களை கடத்த முற்பட்ட 19 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் போதைப் பொருள் விநியோகம் அதிகரித்துள்ளதாகவும் இந்த வருடத்தில் மாத்திரம் 7.7 மில்லியன் டொலர்கள் பெறுமதியான போதைப் பொருட்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மீட்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே இந்த குற்றச்சாட்டின் கீழ் அதிக அளவில் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புக்கு எதிராக சிங்கள மக்கள் வீதியில் இறங்க வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அழைப்பு

(கொழும்பு)

இந்தியாவின் பிரிவினை கொள்கைகளுக்கு துணைபோய் நாட்டின் இறையாண்மையை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு டில்லியில் காட்டிக் கொடுத்துள்ளது. இதற்கு எதிராக சிங்கள மக்கள் வீதியில் இறங்கி போராட முன்வர வேண்டும். அதேபோன்று டில்லியிலுள்ள இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் எவ்வாறு அரசிற்கு எதிராக செயற்பட்ட கூட்டமைப்பினருக்கு இரவுப் போசனம் அளிக்க முடியும். இது தேசத்துரோகிகளுக்கு துணைபோன செயல் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசியலமைப்பிலிருந்து அப்புறப்படுத்தி விட்டால் 13 பிளஸ் என்ற விடயத்தை யாரும் கேட்க மாட்டார்கள். எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அரசியலமைப்பிலிருந்து இந்தியாவின் பிரிவினைவாத கொள்கையான 13 ஆவது திருத்தச்சட்டத்தை அப்புறப்படுத்துமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வலியுறுத்த வேண்டும் என்றும் அவ்வியக்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர கூறுகையில்,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் இந்தியாவிற்கு சென்று நாட்டிற்கு எதிரான சதியில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்குலக சக்திகளையும் சந்தித்துள்ளனர். எனவே இனியும் பொறுமை காப்பதில் பலனில்லை. நாட்டிற்கு எதிராக கடுமையான சூழ்ச்சிகளை கூட்டமைப்பின் உதவியுடன் இந்தியா உள்ளிட்ட மேற்குலக சக்திகள் முன்னெடுக்கின்றன.

இவர்கள் அரசியல் தீர்வென்று கூறுவது நாட்டை துண்டாடும் தமிழீழ கொள்கையினையே. எனவே சிங்கள மக்கள் ஒன்றிணைந்து பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டும். டில்லியில் உள்ள இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசத்தை உடனடியாக நாட்டிற்கு அழைத்து ஜனாதிபதி விசாரணை நடத்த வேண்டும்.

நாட்டிற்கு எதிராக அழுத்தம் கொடுக்கச் சென்ற கூட்டமைப்பினருக்கு இரவுப் போசனம் அளித்தது மிகப்பெரிய தேசத்துரோகச் செயலாகும். எவ்வாறாயினும் தேசிய அரசியலில் ஊடுருவியுள்ள பிரிவினைவாத சக்திகளையும் கொள்கைகளையும் வேரோடு அழிக்க நடவடிக்கை அவசியம் எனக் கூறினார். (அ-2)

## பொலிஸ் நிலையத்தை பிக்குகள் முற்றுகை

(கொழும்பு)

பிலியந்தலை பொலிஸ் நிலையத்தை பெருமளவிலான பௌத்த பிக்குகள் முற்றுகையிட்டுள்ளதால் அங்கு பெரும் பதற்றநிலை காணப்படுவதாக தெரிகிறது.

சட்டவிரோத மதமாற்றம் தொடர்பான சர்ச்சை காரணமாக பிக்குகள் பொலிஸ் நிலையத்தில் குழுமியதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பௌத்த பிக்குகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-2)

## திவிநெகுமவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு

(கொழும்பு)

வாழ்வின் எழுச்சி என்ற திவிநெகும சட்டத்திற்கு எதிராக மனோகணேசன், விக்ரமபாகு கருணாரட்ன, அசாத் சாலி, சிறிதுங்க ஜெயசூரிய, சரத் மனமேந்திர, அருணா சொய்சா ஆகிய எதிரணிக்கட்சி தலைவர்கள் நேற்றைய தினம் உயர் நீதிமன்றத்தில் மூன்று வெவ்வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர்.


வட மாகாணத்தில் வாழும் மக்களின் ஆணையையும் உடன்பாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வட மாகாண ஆளுநருக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது என்றும் மாகாணசபைகளின் நிதி வருவாய் அதிகாரங்களை முறையற்ற விதத்தில் பொறுப்பெடுக்கும் அதிகாரத்தை இந்த சட்டம் மத்திய அரசாங்கத்தின் தனி ஒரு அமைச்சருக்கு வழங்குகிறது என்றும் மனுதாரர்கள் தமது மனுக்களில் தெரிவித்துள்ளனர்.

பிரபல மனித உரிமை சட்டத்தரணி கிரிசாந்த வெலியாமுன்ன இந்த வழக்குகளில் மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகியுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை உயர் நீதிமன்றில் நடைபெறும். (அ-2)

## கண்டி ஆதார வைத்தியசாலையில்

# ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்



(கண்டி)

கண்டி ஆதார வைத்தியசாலையில் தாய் ஒருவர் ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகளை நேற்று அதிகாலை பெற்றெடுத்துள்ளார்.

கண்டி வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட கேகாலை பிரதேசத்தை சேர்ந்த 29 வயது தாயொருவரே இவ்வாறு ஐந்து சிசுக்களை பிரசவித்துள்ளார்.

எட்டு மாதங்களில் சத்திரசிகிச்சை மூலம் இந்த சிசுக்கள் பிரசவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் மூன்று ஆண் குழந்தைகளும் இரு பெண்குழந்தைகளும் அடங்குவதாக தெரிவிக்கப் படுகின்றது.

மேற்படி ஐந்து சிசுக்களினதும் உடல் நிலைகள் ஆரோக்கியமாகவுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் ஒரே தடவையில் ஐந்து குழந்தைகள் பிரசவிக்கப்பட்டமை இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். ஏற்கனவே ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவை சேர்ந்த அதிகாரி ஒருவரின் மனைவி ஐந்து பிள்ளைகளை பிரசவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அதிகார பரவலாக்கத்திற்கு ஒருபோதும் இடமளியோம்

## தேசிய சு.மு தெரிவிப்பு

தமிழ் தேசிய கூட்டமைப்பு உலகில் எந்த மூலை முடுக்கெல்லாம் போய் முறையிட்டாலும் அதிகார பரவலாக்கதிற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கமாட்டோம் என தேசிய சுதந்திர முன்னணியின் அரசியற்குழு உறுப்பினர் பியசிறி விஜேயநயக்க தெரிவித்துள்ளார்.


தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே பியசிறி விஜயநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதையும் மீறி சர்வதேச சக்திகளை திரட்டி அழுத்தம் கொடுக்க கூட்டமைப்பு முனையுமானால் அதற்கெதிராக நாட்டு மக்களை திரட்டி போராடுவோம்.

கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கமைய நாட்டை நிர்வகிப்பற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு தயாரில்லை. புலிகளின் நகல் பிரதிநிதிகளாகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர். புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும் அதன் செயற்பாடுகளுக்கு கூட்டமைப்பு உயிர் கொடுத்து வருகிறது. இந்த நாட்டின் அதிகார பகிர்வுக்கு இடமளிக்க முடியாது.

இந்த விடயத்தில் நாம் உறுதியாக இருந்து விடுகின்றோம். அரசும் இதே நிலைப்பாட்டை கொள்ள வேண்டும். எனவே அதிகார பரவலாக்கத்தை வலியுறுத்தி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எங்கு சென்று முறையிட்டாலும் அதைப் பகிர்வதற்கு நாம் இடமளியோம். இதைக்கூட்டமைப்பு உணர வேண்டும்.

சர்வதேச சக்திகளைத் திரட்டி அரசுக்கு அழுத்தம் கொடுத்து புலிகளுக்குத் தேவையானவற்றைக் கூட்டமைப்புப் பெறமுயலுமானால் அதற்கெதிராக நாட்டு மக்களைத் திரட்டிப் போராடுவோம் என்றார். (அ-2)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட மாகாணமட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப்போட்டியில் யா/இராமநாதன் கல்லூரி மாணவிகள் இருவர் தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளனர். அதேவேளை இவர்கள் இருவருடன் மேலும் மூவர் மாவட்ட மட்ட ஆங்கில தின விழாவிலும் முதலாம், 2 ஆம், 3 ஆம் இடங்களை பெற்றுள்ளனர். அம்மாணவிகள் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:- ஜென்.குமார்)

# கலாசார சொத்துக்களை மீட்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

காலனித்துவ காலகட்டத்தின்போது நாட்டுக்கு வெளியே எடுத்துச்செல்லப்பட்ட பல தரப்பட்ட கலாசார சொத்துக்களை மீட்டெடுப்பதற்கு இலங்கை யுனெஸ்கோவின் உதவியை நாடவுள்ளது என்று கலாசார அமைச்சர் டாக்டர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கலாசார சொத்துக்கள் வைக்கப்பட்டிருக்கும் நாடுகளின் அதிகாரிகளுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை இதற்காக யுனெஸ்கோவின் உதவியை நாடும் முன்முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

காலனித்துவ காலகட்டத்தில் பிரித்தானியா, ஒல்லாந்தர் மற்றும் போர்த்துக்கேய காலனித்துவவாதிகளினால் பெரும் எண்ணிக்கையான கலாசார சொத்துக்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

தற்போது அவற்றில் சில லண்டன் லிஸ்பன் ஹேக் போன்ற நூதனசாலைகளில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

72

வீரபாண்டியன்

...இலங்காபுரனின் படைவீரர்கள் மதுரையை நோக்கி முன்னேறினர். வழியிலுள்ள கிராமங்களையும்



மகுள் மகாவிகாரைச் சிதைவுகள் - பொலநறுவை

சிற்றரசுகளையும் கைப்பற்றியவாறு விரைந்தனர். இத்தருணத்தில் ஜகத் விஜயன் என்ற தளபதியின் தலைமையில் இலங்கையிலிருந்து கப்பற் படை ஒன்று இங்கு வந்து இலங்காபுரனின் படையுடன் சேர்ந்து கொண்டது. பல வெற்றிகளை ஜகத்விஜயனின் படை குவித்தது. ராஜினா நகரத்தில் நிகழ்ந்த யுத்தத்தில் இலங்காபுரனின் தலைமையிலான படை அணி ஒரு புறமும் ஜகத்விஜயனின் படை அணி இன்னொரு புறமுமாகக் குலசேகரன் படையை முற்றுகையிட்டன. குலசேகரன் ராஜினா நகரத்தை விட்டுத் தப்பி ஓடினான்.


குலசேகரன் பயத்துடன் ராஜினா நகரத்தைவிட்டு தப்பி ஓடிப்போனான். அதன்பின்னர் மதுரைக்கு வந்த இலங்காபுரனும் திகவிஜயனும் அங்கு தங்கினர். வீரபாண்டியனிடம் பாண்டிநாட்டை ஒப்படைக்க விரும்பினர். அத்துடன் அந்த இராச்சியத்தில் நிலவிய உண்ணாட்டுக் கலவரங்களையும் அடக்கிவிட்டனர். பொன் அமராவதியில் மூண்ட பெரும் புரட்சியை முற்றாக அடக்கினர். இலங்கை மன்னன் பராக்கிரமபாகு வீரபாண்டியனுக்கு முடிசூட்டு விழாவுக்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டான். முடிசூட்டு விழாவுக்குத் தேவையான சகல திரவியங்களையும் மதுரைக்கு அனுப்பி வைத்தான்.

அதேவேளை ராஜினாவிலிருந்து தொண்டமனார் பிரதேசத்துக்குத் தப்பிஓடிக் கரந்துறைந்த குலசேகரன், தொண்டமனாறைத் தன்வசப்படுத்திக் கொண்டான். அங்கிருந்து கொண்டு தன் படைப் பலத்தைப் பெருக்கிக்கொள்ள நடவடிக்கைகளை எடுத்தான். அதனைக்கேள்வியுற்ற இலங்காபுரன் உடன் தன் படையுடன் சென்று தொண்டமனாறைத் தீக்கிரையாக்கினான். அப்பிரதேசத்தில்தான் பராக்கிரமபாண்டியனைக் குலசேகரன் தன் வாளுக்கு இரையாக்கியிருந்தான். குலசேகரன் தொண்டமனாரைக் கைவிட்டு பாளையங்கோட்டைக்குத்தன் படையுடனும் உறவினர்களுடனும் தப்பி ஓடினான். அவனைத் தொடர்ந்த இலங்காபுரனதும் ஜகத்விஜயனதும் படை பாளயங்கோட்டையை முற்றுகையிட்டுத் தாக்கியது. இப்போரில் ஏராளமான குதிரைகளும் யானைகளும் கைப்பற்றப்பட்டன. தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர். பாளையங்கோட்டையிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட குலசேகரன் மதுரைக்கு ஓடிச்சென்றான். தன்னை இலங்காபுரனின் படை தொடர்ந்து வருவதைக்கண்டு சோழநாட்டிற்குள் புகுந்தான். இலங்காபுரன் ஜகத்விஜயனை படையோடு [illegible] டிருக்குமாறு தெரிவித்துவிட்டு தன்னுடன் ஒரு படையணியை அழைத்துக்கொண்டு, திருக்கானுப்பூர் சென்றான்.

தந்திரமாகச் சோழமன்னனின் ஆதரவைப் பெற்றுக் கொண்ட குலசேகரன் சோழச்சேனாவீரர்களுடன் படையெடுப்புக்குத் தயாராகினான். பெரும் யுத்தம் நிகழ்ந்தது. அதில் ஏழுலீக்குள் தூரத்துக்குத் தமிழர்களின் சடலங்கள் சரிந்து கிடந்தன. சோழநாட்டின் எல்லைப்புறக் கிராமங்களையும் இலங்காபுரன் தீக்கிரையாக்கினான். குலசேகரன் அனைத்தையும் இழந்து ஓடிப்போனான்.


நாட்டை வீரபாண்டியனிடம் ஒப்படைத்துவிட்டு, இந்த இராச்சியத்தில் பராக்கிரமபாகுவின் தலைச்சின்னம் பொறித்த காகப்பணம் பயன்படுத்த வேண்டும்என கட்டளைபிறப்பித்து அதன்பின்னர் பாண்டிய, சோழக் கைதிகளோடு இலங்காபுரன் இலங்கைக்குத் திரும்பினான். இந்த வெற்றியைக் கொண்டாடி நினைவு கூறும் விதமாகப் பராக்கிரமபாகு, பாண்டிவிஜயம் எனும் நாமத்தில் ஒரு கிராமத்தை உருவாக்கினான். பிராமணர்களுக்கு அக்கிராமத்தில் வளமாக வாழ நிலங்களையும் பல நன்கொடைகளையும் வழங்கினான்.





ஆலயச் சிதைவுகள்- பொலநறுவை

# மகா பராக்கிரமபாகு



மகுள் மகாவிகாரைச் சிதைவுற்ற புத்தர் சிலை - பொலநறுவை

மகாபராக்கிரமபாகு நாட்டின் அபிவிருத்தியிலும் பௌத்த சமயத்தின் வளர்ச்சியிலும் அதிக கவனம் செலுத்தினான். நாட்டு மக்களைப் பௌத்த சமயத்தையும் பிக்குகளையும் பேணி ஒழுகுமாறு பணித்தான்.

பௌத்த விகாரைகளிடையே சமய நெறியில் ஒற்றுமைத் தன்மை நிலவ வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தான். முதலில் மூன்று விகாரைகளைச் சேர்ந்த பிக்குகளிடையேயும் மக்களிடையேயும் நிலவிய வேறுபாடுகளைக் களைய முயற்சிகள் எடுத்தான். மஹாகாசியபதேரர் என்ற வயோதிபப் பிக்குவைத் தலைமைப்பீடத்தில் நியமித்தான்.

வட்டகாமினி அபயன் காலத்தில் பிரிந்த அபயகிரி விகாரைப் பிரிவினரையும் மஹாவிகாரையிலிருந்து மஹாசேனன் காலத்தில் பிரிந்த ஜேத்தவன விகாரைப் பிரிவினரையும்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

மஹாவிகாரைப் பிரிவினரையும் சமய ஒழுக்கத்தில் ஒற்றுமைப்படுத்துவதில் பராக்கிரமபாகு மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு வெற்றிபெற்றான். அவற்றுடன் பல விகாரைகளையும், பிக்குகள் தங்குவதற்கான மண்டபங்களையும் தந்ததாதுக்கோயில் ஒன்றையும் அமைப்பித்தான். பாண்டிய நாட்டிலிருந்து கொண்டு வந்த தமிழ்க் கைதிகளைக் கொண்டு கட்டப்பட்ட தெமிளதாதுகோபம் அவனால் கட்டப்பட்டது.

அனுராதபுரத்தில் தமிழர்களால் முன்னர் சேதமாக்கப்பட்ட இரத்தினவாலுகதூபி, அபயகிரி தூபி, ஜேத்தவனதூபி, மிருசுவெட்டிதூபி, லோகபாசடா, அரண்மனைகள், தூபராமய சேத்தியம் என்பன திருத்தப்பட்டன. இலங்கை வர லாற்றின் மாபெரும் மன்னனான பராக்கிரமபாகு 33 ஆண்டுகள் உன்னதமாக இராச்சியத்தைப் பரிபாலித்தபின் மரணமானான்.



மகுள் மகாவிகாரைச் சிதைவுற்ற புத்தர் சிலை - பொலநறுவை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்

## 17.10.2012 - 16.11.2012



## மேடம்

அச்சுவினி , பரணி, கார்த்திகை
1ஆம் பாதம்

**ஆரோக்கியத்தில் அக்கறை தேவை!
மற்றவர்களின் பலத்தையும்
பலவீனத்தையும் துல்லியமாக
எடைபோடும் மேட ராசி நேயர்களே!**

# இம்மாதம் பொருளாதாரநிலை உயரும்; புதிய பொறுப்புக்களும் வந்து சேரும்

வியாபார நோக்கத்துடன் செயற்படுபவர்களை கண்டால் உங்களுக்குப் பிடிக்காது. சொல்வன்மை மிக்கவர்களாக விளங்குவீர்கள். யாரிடமும் புன்னகை மாறாமல் பேசுவது உங்களின் தனிச் சிறப்பாகும். அந்தரங்க இரகசியங்களை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டீர்கள். கம்பீரமான தோற்றத்திற்கு சொந்தக்காரர்களாக விளங்கும் நீங்கள் கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்தில் 2 இல் கேதுவும் 8 இல் இராகுவும் சஞ்சரிக்கின்றனர். அது மட்டுமல்ல இராசிநாதன் செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். எனவே இறைவழிபாட்டின் மூலமே எந்தக் காரியத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆரோக்கியத்திலும் அதிக அக்கறை காட்ட வேண்டிய நேரமாகும். திட்டமிட்ட காரியங்களில் திசை மாற்றம் ஏற்படாமல் இருக்க எதையும் முன்யோசனையுடன் செய்வது நல்லது.

குறிப்பாக சகோதரர்களை சார்ந்து இருப்பவர்கள், அவர்களை அனுசரித்து செல்வதன் மூலமே ஆதாயத்தை அடைய முடியும். சப்தம ஸ்தானத்தில் சந்திரன், சூரியன், சனி, புதன் ஆகிய 4 கிர்கங்களும் கூடி இருக்கின்றன. எனவே, வேலைப்பளு கூடும். வேண்டிய தொகை கிடைத்தாலும் நடக்கும் காரியத்தில் தாமதம் ஏற்படலாம்.

வாகன மாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றங்கள் கூட திடீரென வந்து சேரலாம். செவ்வாய், இராகு சேர்க்கைக்கு பரிகாரமாக அனுகூலம் தரும் நட்சத்திரத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்து, செவ்வரளி அல்லது செம் பருத்தி மாலை அணிவித்து வழிபாடு செய்வதோடு சர்ப்ப சாந்தியும் முறையாக செய்தால் சங்கடங்கள் தீரும். சந்தோஷங்கள் சேரும்.

யோக வாழ்க்கை வந்திடவும் உன்னத நிலையை அடைந்திடவும்... எனத் தொடங்கும் நாக கவசத்தை இராகு சந்நிதியில் பாடி வழிபாடு செய்தால் யோகங்கள் எல்லாம் வந்து சேரும்.

**நீச்ச சுக்கிரன் நினைத்ததை நிறைவேற்றுவாரா?**

ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி ராசியில் சுக்கிரன் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். வாழ்க்கை துணை வழியே சில நெருக்கடிகள் வந்து சேரலாம். இதுவரை பாராட்டி வந்த உங்கள் உறவினர்கள் உங்களை குறை சொல்ல தொடங்குவார்கள். இந்த நேரத்தில் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். வெள்ளிக்கிழமை விரதம் இருந்து சந்தோஷமாதா வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**செல்வ நிலையை உயர்த்தும் செவ்வாய் பெயர்ச்சி**

எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி தனுசு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இராசிநாதன் 9 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பொருளாதாரநிலை உயரும். புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்துசேரும். பூர்வீக இடங்களால் ஏற்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு உடன்பிறப்புகள் ஒத்துவந்து உதவிக்கரம் நீட்டுவர். வாகன மாற்றம் செய்ய உகந்த மாதமாக இம்மாதம் இருக்கிறது. அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் நேரத்தில் வாகன பழுதுகள் அதிகரித்திருக்கலாம். எனவே, அது விலகும் நேரத்தில் புதிய வாகன சேர்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள்.

இம்மாதம் வியாழன்தோறும் தென்முகக் கடவுளை வழிபட்டு வருவது நல்லது. இம்மாதம் சோர்வும் சுறுசுறுப்பும் மாறி மாறி வந்து சேரும். சொல்லை செயலாக்கிக் காட்ட பெரும் பிரயாசை எடுக்க வேண்டிய சூழ்நிலை அமையலாம். மாற்றுக் கருத்துடையோர் எண்ணிக்கை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது. வாழ்க்கைத்துணையோடு விட்டுக் கொடுத்து செல்வதுதான் நல்லது. அப்போதுதான் மகிழ்ச்சி கூடும்.

மாதத்தின் முற்பகுதியில் செலவும் பிற்பகுதியில் வரவும் அதிகரிக்கும். ஆரோக்கியத்திற்கென்று ஒரு தொகையை செலவிடுவது நல்லது. அங்காரக வழிபாடு அன்றாட வாழ்வை நன்றாக அமைத்துக் கொடுக்கும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்

கார்த்திகை,2,3,4 ஆம் பாதங்கள்
ரோகிணி, மிருகசீரிடம்
1,2 ஆம் பாதங்கள்

**சுகங்களும் சந்தோஷங்களும் கூடும்!
பாசத்தோடும் நேசத்தோடும் பழகும்
இடப இராசி நேயர்களே!**



## இடபம்

# பணப்புழக்கம் அதிகரிக்கும்; பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் கைகொடுத்துதவுவர்

காரியங்களைச் சாதிப்பதில் சாமர்த்தியசாலிகள் நீங்கள். பெரிய பொறுப்புகளும் பதவிகளும் தானாகவே தேடி வரும். முன் வருபவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்களும் நீங்கள்தான். இசை, இலக்கியம், நாடகம் போன்றவற்றில் ஈடுபாடு அதிகம் கொள்வீர்கள். இனிமையாக பேசும் நீங்கள், இனிப்பு சுவையை அதிகம் விரும்புபவராகவும் இருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்மகுரு வக்ர கதியில் இருப்பது யோகம்தான். சென்ற மாதத்தைக் காட்டிலும் இம்மாதம் சிறப்பாகவே இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

ஆறாமிடத்தில் 4 கிரகங்கள் சேர்ந்து சஞ்சரிக்கப்போகின்றன. இந்த கூட்டுக்கிரக யோகம் உங்களுக்கு போட்டிகளில் வெற்றியை கொடுக்கும். பொல்லாதவர்களை விலக வைக்கும். கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். கிளை நிலையங்கள் திறக்கும் சூழ்நிலையும், புதிய நண்பர்களின் ஒத்துழைப்பும் தொழில் மாற்றங்களும் நிகழும் நேரமிது.

என்ன இருந்தாலும் ஜென்மத்தில் கேதுவும் 7 இல் இராகுவும் அல்லவா சஞ்சரிக்கிறார்கள். எனவே, சர்ப்ப தோஷத்தின் பிடியில் சிக்கியுள்ள நேரமிது. அதற்கு பரிகாரமாக இராகு, கேதுக்களுக்கு பரிகாரம் செய்ய வேண்டும். அதற்குரிய ஸ்தலங்களுக்கு தோஷம் விலகக்கூடிய பலம் பெற்ற நாளில் சென்று நாகசாந்தி செய்வது நல்லது.

உச்சம் பெற்ற சனி உங்களுக்கு யோகத்தை வாரி வழங்க சனி கவசம் பாடி சனீஸ்வரரை வழிபாடு செய்யுங்கள். சுக்கிரன் நீச்சம் பெறும் இம்மாதத்தில் பெண்வழிப்பிரச்சினைகள் சிலவற்றை சந்திக்க நேரிடும். இருந்தாலும் சந்திரன் உச்சம் பெற்ற இராசி உங்கள் இராசி என்பதால் பெரிய அளவில் பாதிப்பு வரலாம். இருப்பினும் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மாதக்கடைசியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு உண்டான வாய்ப்புகள் கைகூடி வரும்.

**இராசி நாதன் நீச்சம் பெறும் நேரம்!**

இராசிநாதன் சுக்கிரன் கன்னி இராசியில் ஒக்டோபர் 23 ஆம் திகதியில் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக ஆரோக்கிய குறைபாடு அடிக்கடி ஏற்படலாம். உங்கள் உடல்நலம் சீராக இருந்தாலும் உங்களை சார்ந்தவர்களுக்கு உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் யாருக்கேனும் ஏதேனும் ஒரு வகையில் பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவ செலவினை உருவாக்கும். பணப்புழக்கமும் கொஞ்சம் குறைவாகவே இருக்கும். அரசு வழி கடன் உதவிகளைப்பெற்று தொழிலை வளப்படுத்தும் நேரமிது. இக்காலத்தில் தையல்நாயகி பதிகம்பாடி தையல் நாயகி அம்மனை வழிபடுவது நல்லது.

**அஷ்டமத்தில் செவ்வாயின் ஆதிக்கம்!**

எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதியில் அதாவது மாதத்தின் கடைசி வாரத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது. உடல் நிலையில் தொல்லைகள் ஏற்படலாம். உடனுக்குடன் கவனித்துக்கொண்டு மருத்துவ ஆலோசனைகளை பெறுவதன் மூலம் பெரிய பாதிப்புகளில் இருந்து விடுபட இயலும். உடன்பிறப்புகளிடம் பாசம் குறையலாம். இடம், பூமி வாங்குவதில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படலாம். பத்திரப் பதிவுகளை சரிபார்த்து வாங்குவதே நல்லது. பூமி யோகத்தை வளப்படுத்தும் செவ்வாய், உங்கள் சுய ஜாதகத்தில் இருக்குமிடத்தையும் பாதாசார பலத்தையும் அறிந்து அதற்குரிய ஸ்தலவழிபாடுகளையும் பரிகாரங்களையும் மேற்கொண்டால் சிக்கல்களிலிருந்து சீக்கிரம் விடுபட இயலும். இம்மாதம் பிரதோஷ நாளில் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

மாதத்தொடக்கத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மற்றவர்கள் உங்கள் எண்ணங்களை புரிந்து கொண்டு செயற்படுவர். உற்றார், உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். உடல்நலம் சீராக இருக்கும். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்க முன் வருவீர்கள். தனுசு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கும்பொழுது வாழ்க்கைத் துணையை அனுசரித்து செல்வது நல்லது. மற்றவர்களுக்கு பணப் பொறுப்பு சொல்வதை தவிர்த்தால் மகிழ்ச்சியோடு வாழ இயலும். உங்கள் பெயரில் வாங்கிய சொத்துக்களை விற்கிறார்களே என்று நினைக்க வேண்டாம். மீண்டும் வாங்கும் சூழ்நிலை உருவாகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால் கொடுத்தால் அழகு அதிகரிக்கும்

தாய்ப்பால் கொடுப்பதால் தாய்க்கும் சேய்க்கும் எண்ணற்ற பயன்கள் உள்ளன.

### குழந்தைக்கு கிடைக்கும் பயன்கள்

தாய்ப்பாலிலுள்ள நோய் எதிர்க்கும் சக்தியை உடைய புரதப்பொருள் (Immuno globulin) குழந்தையை கொடிய நோய்கள், மார்புச் சளி (நிமோனியா), தோலில் ஏற்படும் ஒவ்வாமை (அலர்ஜி) போன்ற பாதிப்பிலிருந்து பாதுகாக்கிறது.

### அனைத்து சத்தும் கிடைக்கும்

மருந்துகளே கிடைக்க வழியில்லாத குக்கிராமங்களில் கூட கிருமிகளினால் ஏற்படும் வாந்திபேதியை தாய்ப்பால் மட்டும் கொடுத்து குணப்படுத்தலாம். தாய்ப்பாலில் புரதம், கொழுப்புச்சத்து மற்றும் மூளை வளர்ச்சிக்குத் தேவையான அமினோ அமில, கொழுப்பு அமிலங்கள் ஆகியவை இருப்பதால் குழந்தை சீராக உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி பெற்று வளரும்.

### தாய்ப்பாலின் பலன்கள்

தாய்-சேய் பாசப்பிணைப்பு பலப்படும். தாயின் அரவணைப்பு குழந்தைக்கு கிடைக்கும். சத்துக்குறைந்த சவளை குழந்தையாக இரத்தச் சோகையுடன் குழந்தை வளர்வது தடுக்கப்படுகின்றது.

புட்டிப்பால் கொடுப்பதினால் குழந்தைக்கு அடிக்கடி நோய் வருவதுடன் பணமும் வீணாக செலவிடப்படுகிறது. வாந்திபேதி மற்றும் காதில் சீல் வடிவது போன்ற முக்கிய நோய்கள் புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றது.

### தாய்க்கு அழகு அதிகரிக்கும்

தாயின் மனநலம் காக்கப்படுகிறது. தாயின் அழகு கூடுமே தவிர குறையாது. கருப்பை புற்றுநோய், மார்பகப்புற்று நோய் தாய்க்கு வருவது தடுக்கப்படுகிறது. குடும்பக் கட்டுப்பாட்டை இயற்கையிலேயே கடைப்பிடிக்க தொடர்ந்து தாய்ப்பால் கொடுப்பது அவசியம். தொடர்ந்து தாய்ப்பால் கொடுக்கும் நிலையில் 98 சதவீத அளவுக்கு கர்ப்பமாவது தடுக்கப்படுகின்றது.

மேலும் தாயின் கர்ப்பப்பை சுருங்கி பழைய நிலைக்குத் திரும்ப தாய்ப்பால் கொடுப்பது உதவுகிறது.

### புறத்தே அகற்றிய தாய்ப்பால் (Expressed Breast Milk)

ஏதாவது நோயினால் குழந்தை தாய்ப்பால் குடிக்க முடியாத நிலை, தாய்க்கு பால் கொடுக்க முடியாத அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டால் தாய்ப்பாலை மார்பகத்திலிருந்து பீய்ச்சி கிண்ணத்தில் வைத்துக் கொண்டு, சொட்டுக்களாகவோ (மருத்துவமனையில் இருந்தால்) சிறு குழாய் மூலமோ வாய் வழியாக குழந்தைக்கு கொடுக்கலாம்.

### மார்பகத்தில் பால் கட்டுதல்

குழந்தைக்கு அடிக்கடி பால் கொடுக்க மறுக்கும் தாய்மார்களுக்கு மார்பகத்தில் தாய்ப்பால் கட்டி வேதனை எடுக்க ஆரம்பிக்கும். இம் மாதிரியான நிலை, அளவுக்கதிகமாக தாய்ப்பால் சுரந்திடும் தாய்மார்களுக்கு ஏற்



படும்.. இதனால் குளிர் காய்ச்சல் ஏற்பட்டு தாய்மார் அவதிப்படுவதுண்டு. சில நேரங்களில் மார்பகத்தில் கட்டியுள்ள பால் சீழாக மாறும் நிலை ஏற்பட்டு, அதனை அறுவைச் சிகிச்சை செய்து அகற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும். தாய் தன் பாலைக் கொடுக்க முடியாத நேரத்தில் மற்றொரு தாயின் பாலை கொடுப்பதில் தவறில்லை.

### வேலைக்கு செல்லும் தாயாக இருந்தால்...!

வேலைக்கு செல்லும் தாய்மார்கள் தங்களுக்கு கிடைக்கும் மருத்துவ விடுப்பில் முழுமையாக குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதையே முக்கிய பணியாக கருதவேண்டும். குழந்தை அழும்போதெல்லாம் அதற்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும். அடிக்கடி பாலைக் குடிக்கக் கொடுக்கும் போதுதான் போதுமான அளவு பால் சுரக்க வழி ஏற்படுகிறது. காலையில் பணிக்குச் செல்லும் முன் எத்தனை தடவை தாய்ப்பால் கொடுக்க முடியுமோ அத்தனை தடவை கொடுக்க வேண்டும். அதற்கு முன் தாய்ப்பாலை த்னியாக சுத்தமான கிண்ணத்தில் எடுத்து வைத்து வீட்டில் உள்ளோரிடம் அதனை குழந்தைக்கு முறைப்படி கொடுக்கச் சொல்லிவிட்டு பணிக்கு செல்லவும். சாதாரண வெப்பநிலையில் 12 மணி நேரமும் குளிர்சாதனப்பெட்டியில் வைத்திருந்தால் 24 மணி நேரமும் தாய்ப் பால் கெடாமல் இருக்கும். பணியிலிருந்து வீட்டிற்கு திரும்பியவுடன் மறுபடியும் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதை இரவு, பகல் பாராமல்தொடர வேண்டும்.பால் புளித்திருக்கும் கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் முற்றிலும் தவறானது.

அத்துடன் மார்பகக் காம்பில் விரிசல் ஏற்பட்டு தாய்க்கு வலி ஏற்படின் தாய்ப்பாலை கறந்து கிண்ணத்தில்வைத்து தேக்கரண்டி அல்லது பாலாடை மூலம் குழந்தைக்கு புகட்ட வேண்டும்.

மார்பகக் காம்பு அளவுக்கதிகமாக நீண்டிருந்தாலும் குழந்தையால் பால் குடிக்க முடியாது. குழந்தையின் தொண்டையில் அடைத்துக் கொள்வ தால் மூச்சுத்திணற ஏதுவாகும்.

### குழந்தை பிறந்ததும் பத்தியம் தேவையா?

இது முற்றிலும் தவறான எண்ணம் ஆகும். புரதச்சத்து, விற்றமின் சத்து நிறைந்த காய், கனி வகைகள் உட்கொண்டு தண்ணீர் கலக்காத பாலும் அருந்த வேண்டும். அத்துடன் அகத்திக்கீரையும் கருவாடும் அதிகம் சாப்பி




ட்டால் தாய்ப்பால் அதிகமாக சுரக்கும்.

### குழந்தை பிறந்தவுடன்...!

குழந்தை பிறந்த அரை மணி நேரத்துக்குள் கண்டிப்பாக ஒவ்வொரு தாயும் தாய்ப்பால் கொடுத்திட வேண்டும். அதுவும் குழந்தை பிறந்தவுடன் சுரக்கும் மஞ்சள் நிற- நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்த சீம் பாலை கட்டாயம் குழந்தைக்கு தாய் கொடுக்க வேண்டும்.

### தாய்ப்பால் சுரக்கவில்லையே என்று சொன்னால் நம்பலாமா?

நல்ல ஆரோக்கியமான உடல் மற்றும் மனநலம் உள்ள தாய்க்கு தடையின்றி தாய்ப்பால் உறுதியாகச் சுரக்கும். தனக்கு போதியளவு தாய்ப்பால் இல்லையே என்ற மன நிலையை தவிர்த்து தனது குழந்தைக்கு நிச்சயம் பால் கொடுப்பேன் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தாலே போதும். அதிகபட்சம் 500 மில்லிலீற்றர் தாய்ப்பால் ஒருநாளைக்கு சுரக்கும் என்பதை ஒவ்வொரு தாயும் உணர வேண்டும்.

### நோய் இருந்தாலும்...!

தாய்க்கு காசநோய், மலேரியா மற்றும் தைபோய்ட்டு காய்ச்சல் போன்ற நோய்கள் இருக்கும் போது அதற்கான மருந்து வகைகளை எடுத்துக்கொண்டு, தாய்ப்பால் தாராளமாக ஊட்டலாம்.

### வயிற்றுப் போக்கு இருந்தாலும்...!

நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அதிலுள்ள நோய் எதிர்க்கும் சக்தியான இம்னோ குளோபிலின் என்ற புரதச்சத்து நோய்கிருமிகளை எதிர்த்துப் போராடி வயிற்றுப்போக்கினை குணப்படுத்த பெரிதும் உதவுகிறது.

### குழந்தை ஆரோக்கியமாக வளர தாய்ப்பால் எத்தனை காலம் கொடுக்க வேண்டும்?

பிறந்த நாள் முதல் ஆறு மாதங்கள் வரை கட்டாயம் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். தண்ணீர் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. புட்டிப்பால் கொடுக்கவே கூடாது.

வேறெந்த மாற்று வகை தயாரிப்புகளான பால் மாவினை அறவே கொடுக்கக் கூடாது. நான்கு மாதங்கள் முதல் திட உணவு வகையான கேழ் வரகு, உடைத்த கடலைக் கஞ்சி, அரிசிமா, உடைத்த கடலை மாக்கஞ்சி ஆகியவற்றை வீட்டிலேயே தயார் செய்து கொடுக்க வேண்டும்.

## அணு விஞ்ஞானிகள் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர்

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

இலங்கை அணு விஞ்ஞானிகள் ஆபத்தை எதிர்நோக்கி வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஆதரவு அணு ஆலைகள் இலங்கையில் காணப்படுவதாக வெளியான போலித் தகவல்களினால் இலங்கை அணு விஞ்ஞானிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சிலரும் இந்திய ஊடகங்களும் இணைந்து இந்த போலியான தகவல் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறன போலித் தகவல்களினால் அணு விஞ்ஞானிகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் பல நாடுகளில் அணு விஞ்ஞானிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுவதாகவும் சில விஞ்ஞானிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் 10 தொடக்கம் 15 ஆண்டுகளுக்கு அணு உலை அமைப்பது குறித்து இலங்கை சிந்திக்கவே இல்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரிப்பு

கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மேற்குறித்த கிராமங்களில் நாளுக்கு நாள் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இக்கட்டாக்காலி மாடுகளால் பெரும்போக பயிர்ச்செய்கை வயல்கள் அனைத்தும் சேதமாக்கப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பாக உரியவர்கள் எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. எனவே, தமது நலனைக் கருத்திற்கொண்டு கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் முன்வர வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)

## அமெரிக்க காங்கிரஸ் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் இல்லை?

(கொழும்பு)

அமெரிக்க காங்கிரஸ் சபையில் இந்த ஆண்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படமாட்டாது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் சிலர் தீர்மானம் நிறைவேற்ற முயற்சி எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த தீர்மானம் நிறைவேற்றும் முயற்சியை அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதரகம் தடுத்துள்ளது.

இலங்கையின் உண்மையான நிலைமை குறித்து அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர்களுக்கு தூதரகம் விளக்கம் அளித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதன்காரணமாக இந்த ஆண்டு அமெரிக்க காங்கிரஸ் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்படமாட்டாது. மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி அமெரிக்க காங்கிரஸ் சபையில் தீர்மானம் நிறைவேற்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. (அ-2)

## தேனீக்கள் தாக்கியதில் 42 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

இரத்தினபுரி,பொத்குல் விகாரைப் பகுதியில் தேனீக்களின் தாக்குதலுக்கு உள்ளான அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அடங்கலாக 42 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹிக்கடுவ, தெல்வத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே மேற்படி தேனீக்களின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர். (ந-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பில் இந்தியா குருட்டுத்தனமாக நடந்து கொண்டது

• பி.பி.சி செய்தியாளர் பிரான்சிஸ் ஹரீசன் இந்தியாவை தளமாகக் கொண்ட இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

கேள்வி: போரிலிருந்து மீண்டவர்களுக்கு இலங்கை அரசாங்கமானது போதியளவு புனர்வாழ்வு அளிக்கிறதா?

பதில்: 2009 இல் இலங்கை இராணுவம் யுத்தக் குற்றங்களைப் புரிந்ததை தென் இலங்கை வாழும் பெரும்பாலான மக்கள் மறுக்கின்றனர். மறு



புறத்தில் விடுதலைப்புலிகள் தமது சொந்த மக்கள் மீது அதாவது யுத்தத்தில் தோல்வியைச் சந்திப்பது நிச்சயம் எனத் தெரிந்த போதிலும் பலாத்காரமாக இளையோரைப் படையில் இணைத்தமை போன்ற பல்வேறு மீறல்களைப் புரிந்தனர் என்பதை பெரும்பாலான தமிழ் மக்கள் நிராகரிக்கின்றனர்.

இலங்கை வாழும் சிங்கள தமிழ் மக்களிடையே தத்தம் இனம் சார்ந்த உணர்வுநிலை அதிகம் காண்ப்படுவதால் இவ்வாறான பிரச்சினை ஒன்றுக்கு தீர்வு காண்பதென்பது மிகக் கடினமான ஒன்றாகும் என நான் கருதுகிறேன். யுத்தம் தொடர்பில் தமிழ் மற்றும் சிங்களவர்கள் இருவேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பதால் பொதுவான நிலைப்பாடொன்றை இரு சமூகத்தவர்களையும் ஏற்றுக் கொள்ளச் செய்வதென்பது இலகுவானதன்று.

புனர்வாழ்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் அதேவேளையில் யுத்தத்தில் தப்பிப் பிழைத்த ஆயிரக்கணக்கானோர் தென்னிந்தியா மற்றும் தென்கிழக்காசியா ஆகியவற்றின் ஊடாக வேறு நாடுகளுக்குத் தப்பிச் செல்கின்றனர். சிலர் ஐரோப்பா, அமெரிக்கா அல்லது அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் தப்பிச் செல்கின்றனர். இவ்வாறு செல்கின்றவர்களுக்கு வெளிநாடுகளில் எந்தவொரு புனர்வாழ்வுத் திட்டங்களும் உத்தியோகபூர்வமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவர்கள் அடிப்படையில் தேவையான உதவிகளைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

யுத்தத்தில் தப்பிப்பிழைத்த மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கூட மேற்கொள்ளப்படவில்லை. யுத்தத்தில் இறந்தவர்களின் ஆத்மா சாந்திக்காக மேற்கொள்ளப்படும் மதச் சடங்குகளைக்கூட வெளிப்படையாகச் செய்ய முடியாத நிலையில் இலங்கை வாழும் தமிழர்கள் உள்ளனர். முள்ளிவாய்க்காலின் ஊடாகச்சென்ற மக்கள் அழிக்கப்பட்டனர். இதிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களால் இரவில் நித்திரை கூடக் கொள்ள முடியவில்லை. அவர்கள் தமது அன்புக்குரியவர்களை காப்பாற்ற முடியாமல் போனதால் குற்ற உணர்வில் தவிக்கின்றனர். இவர்களுக்கு உள ஆற்றுப்படுத்தல் முக்கியமானது. அத்துடன் பாதுகாப்பு, தொழில் மற்றும் வீடுகள் போன்ற அடிப்படைத் தேவைகளும் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.


கேள்வி: இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா.வல்லுனர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஏதாவது பெறுபேற்றை ஏற்படுத்தும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: 2011 இல் ஐ.நா.வல்லுனர் குழுவால் வெளியிடப்பட்ட இலங்கை



தொடர்பான போர்க்குற்ற விசாரணை அறிக்கை சிறந்த ஆவணமாக உள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் கூட்டத் தொடரில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கான வாக்களிப்பில் ஐ.நா. விசாரணை அறிக்கை பங்களித்துள்ளது. பொதுவாகநோக்கில் ஐ.நா. அறிக்கை போதுமான விளைவை ஏற்படுத்திய போதிலும் குறிப்பாக நோக்கில் இதன் பங்களிப்பு போதியதாக இல்லை என்பது வெளிப்படையானது.

இலங்கை மீது மேலும் அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும். இந்த நூற்றாண்டில் அதிக இரத்தம் சிந்தப்பட்ட இடங்களில் ஒன்றாக முள்ளிவாய்க்கால் உள்ளது. ஆனால், இது தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் இன்னமும் பொறுப்பளிக்க முன்வரவில்லை.



கேள்வி: இந்த விடயமானது பூகோளத்தின் கவனத்தை போதியளவில் ஈர்த்துள்ளதா? இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்காக அனைத்துலக சமூகம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்?

பதில்: அனைத்துலக ரீதியில் மறக்கப்பட்ட ஒரு விடயமாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் காணப்படுகிறது. ஐரோப்பாவில் மட்டும் தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். புலம்பெயர் தமிழர் சமூகமானது பரந்த இறையாண்மை அமைப்பொன்றைக் கட்டியெழுப்பத் தவறிவிட்டது. இங்கு என்ன நடந்தது என்பது அனைத்துலக சமூகம் உற்று அவதானிக்க வேண்டும். ஐ.நா. வல்லுனர் குழுவின் அறிக்கை, எனது புத்தகம் போன்றவற்றை வாசிப்பதுடன் கொலைக்களங்கள் என்ற சனல் 4 தொலைக்காட்சி சேவையால் வெளியிடப்பட்ட போர் தொடர்பான காணொளியையும் அனைவரும் பார்க்க வேண்டும். அத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கை போன்றவற்றை வாசித்து இலங்கையில் தொடரப்பட்ட யுத்தம் தொடர்பில் நீங்கள் தெளிவுபெறவேண்டும். சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஐ.நா.வல்லுனர் குழுவால் விடுக்கப்பட்ட கோரிக்கையை தனிப்பட்ட ரீதியாக நான் ஏற்றுக் கொள்கிறேன். இதுவே இலங்கையில் உண்மையைக் கண்டறிந்து சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு வழியாக உள்ளது.

கேள்வி: இலங்கை ஆட்சியாளர்களுக்கெதிராக தமிழ்நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையுடன் வர்த்தகசார் உறவுகளைப் பேணக் கூடாது என தமிழ்நாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் இலங்கைத் தமிழர் விடயத்தில் உதவும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: நான் ஊடகவியலாளரே தவிர. அரசியல்வாதி அல்ல. இது அரசியல்வாதி ஒருவரின் கொள்கை தொடர்பில் கேட்கப்பட வேண்டிய வினாவாகும்.

கேள்வி: இலங்கையில் மீண்டும் தமிழர் போராட்டம் வெடிப்பதற்கான வாய்ப்பு உள்ளதா?

பதில்: தமிழ் மக்களின் அவர்களை இலங்கை அரசாங்கம் ஏற்று அவற்றை நிறைவேற்றாவிட்டால் இது அடுத்த தலைமுறையின் ஆயுதப்போராட்டம் ஒன்றை மீண்டும் தொடங்க காலாக அமையலாம். இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்க வேண்டும்.

வே.பிரபாகரன் சிறுவனாக இருந்தபோது, தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலகங்களைக் கேள்விப்பட்டார். இதுவே பிரபாகரன் ஆயுதம் தூக்க தூண்டுதலாக இருந்தது. இதுபோன்ற முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாக அடுத்த தலைமுறையைச் சேர்ந்த சிறார்கள். கேள்விப்பட்டால் என்ன நடக்கும் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

கேள்வி: தமிழர்களும் சிங்களவர்களும் தமது பிடிவாதப் போக்கை கைவிட்டு இருதரப்பும் தமக்கிடையே மீளிணக்கப்பாட்டை உருவாக்க முடியுமா?

பதில்: முதலில் உண்மை என்பது மதிக்கப்படாதவிடத்து மீளிணக்கப்பாடு சாத்தியமில்லை. ஏதாவது பிழைகள் நடந்திருந்தால் தவறைச் செய்தவர்கள் தமது தவறுகளை ஏற்றுக் கொள்ள முன்வரவேண்டும். ஆனால் தற்போது இதற்கு எதிர்மாறான செயற்பாடுகளே நடைபெறுகின்றன. பிளவுகள் இருக்கும் வரை மீளிணக்கப்பாடு சாத்தியப்படமாட்டாது. (முற்றும்)

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவுறுதீவு அகதிகள் வசதிகளை ஏற்படுத்தக்கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

**நவுறுதீவில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதி தஞ்சக் கோரிக்கையாளர்கள் தம்மீதான விசாரணைகளை விரைவுபடுத்தி அவுஸ்திரேலிய அரசு தமக்கு தீர்வு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார். அல்லது தம்மை அவுஸ்திரேலிய பெருநிலப்பரப்புக்குள் உள்ள முகாம்களுக்கு மாற்றி அங்கு வைத்து தம்மீதான விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.**

கிறிஸ்மஸ் தீவிலிருந்து அண்மையில் நவுறு தீவிலுள்ள பரிசீலனை முகாமுக்கு அனுப்பப்பட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த நூற்றுக்கணக்கான தஞ்சக் கோரிக்கையாளர்கள் நேற்றையதினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக அங்கிருந்து இலங்கை தமிழர் ஒருவர் பிபிசி செய்தி சேவைக்கு தெரிவித்துள்ளார்.

நவுறுதீவு முகாமில் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் போதாது என்றும் உரிய மருந்து மற்றும் உணவு வசதிகள் இல்லாமையால் தாம் துன்பப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தாங்க முடியாத வெயில் மற்றும் மழைக்கு ஈடுகொடுக்க முடியாத கூடாரங்களில் தாம் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் கடந்த சில நாட்களாக பலர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் நவுறுதீவில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

தம்மை கிறிஸ்மஸ் தீவிலிருந்து நவுறு தீவுக்கு அனுப்பும்போது தமது கோரிக்கை தொடர்பான விசாரணைகள் 6 மாதங்களுக்குள் முடியும் என்று குடிவரவுத்துறை அதிகாரிகள் உறுதியளித்ததாக அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் அண்மையில் தம்மை சந்தித்த அவுஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் போவன் விசாரணைகள் முடிய நீண்டகாலம் எடுக்கலாம் என்று கூறியதாகவும் தமது எதிர்காலம் பற்றி உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதனால் தம்மை நவுறு தீவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குள் அனுப்ப அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் தெரிவித்தனர். நவுறு தீவில் தற்போது 270 இற்கும் மேற்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 190 இற்கும் மேற்பட்டவர்கள் இலங்கையர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

ஆபத்தான கடற்பயணங்கள் மூலம் அவுஸ்திரேலியா நோக்கி வருவோரை கட்டுப்படுத்தும் நோக்கோடு அவர்களை அவுஸ்திரேலியாவுக்குள் நேரடியாக அனுமதிக்காமல் நவுறு மற்றும் பப்புவா நியூகினி ஆகிய தீவுகளில் அமைந்துள்ள பரிசீலனை முகாம்களுக்கு அவுஸ்திரேலிய அரசு அனுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கலாசார விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(சிவநகர்)

கரைச்சி பிரதேச செயலக கலாசார விழாவும் கரைஎழில் சஞ்சிகை வெளியீடும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான மு.சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ந.சுதாகரன், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் ஈ.தயாரூபன், ஓய்வுபெற்ற ஆசிரியர் தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கலை இலக்கிய போட்டிகளிலும் கவிதை கட்டுரை போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் தகை சார்ந்த கலைஞர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-3-254)

# 13 ஆவது திருத்தச்சட்டத்தை கைவிடுவது இந்தியாவுடனான உறவை பாதிக்கும்

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் கருத்தானது அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் அதிகாரப் பரவலாக்கலை வழங்கப் போவதில்லை என்பதற்கான உச்சக்கட்ட உறுதி மொழியாகும் என்று ஐ.தே.க. தெரிவித்தது.

ஜனாதிபதியின் 13 பிளஸ் என்பதை இக்கருத்து பொய்யாக்கியுள்ளதாகவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.க.வின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இந்தியா சென்று பிரதமர் மன்மோகன்சிங் உட்டப முக்கியஸ்தர்களை சந்தித்து இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்ற தெரிவுக்குழு காலத்தை கடத்தும் திட்டமாகுமென்றும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை அரசாங்கம் வழங்காதென்றும் தெரிவித்துள்ளது.

அத்தோடு இந்தியாவிற்கு பல தடவைகள் விஜயங்களை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல முக்கியஸ்தர்கள் பதின்மூன்றுக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவோமென உறுதியளித்தனர்.

இவ்வாறானதோர் சூழலிலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்தியத் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கும் தருணத்தில் 13 ஆவது திருத்தத்தை முற்றாக ஒழிக்க வேண்டுமென பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது அரசாங்கத்தின் உண்மையான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிர்ச்சினைக்கு தீர்வாகவே 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதனை அரசாங்கம் தூக்கியெறிய முயற்சிப்பது இந்தியாவுடனான நட்புறவை பாதிக்கும் அதேவேளை தமக்கு எந்தவிதமான அரசியல் தீர்வும் கிடைக்கப்போவதில்லை என்ற அவநம்பிக்கையை தமிழ் மக்கள் மனதில் தோற்றுவிக்கும் என்றார். (அ-2)

# பாக். இராணுவ ஜெனரல் கொழும்புக்கு வருகிறார்

இலங்கைக்கான தூதுவராக ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் ஒருவரை நியமிக்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. இலங்கை உள்ளிட்ட 14 நாடுகளுக்கான தூதுவர்களை பாகிஸ்தான் மாற்றியமைக்க முடிபு செய்துள்ளது.

இலங்கைக்கான தூதுவராக உள்ள சீமா இலாகி பலுச் அடுத்த மாதம் ஓய்வு பெறவுள்ள நிலையில் புதிய தூதுவராக ஓய்வு பெற்ற பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஒரு வரை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கான தூதுவராக நியமிப்பதற்கு தகுதியான ஓய்வுபெற்ற ஜெனரல்களின் பட்டியல் ஒன்று பாகிஸ்தான் அரசின் பரிசீலனையில் உள்ளது.

பெரும்பாலும் பாகிஸ்தான் புலனாய்வு பிரிவில் பணியாற்றிய ஒரு அதிகாரியே இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையுடன் நெருக்கமான பாதுாப்பு உறவுகளை வளர்த்துக் கொள்ளும் வகையிலேயே ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியை தூதுவராக நியமிக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் உளவுப்பிரிவு இந்தியாவை உளவு பார்ப்பதற்கான தளமாக இலங்கையை பயன்படுத்தி வருகிறது என்று அண்மையில் இந்திய புலனாய்வு அமைப்புக்கள் எச்சரித்திருந்தன.

இந்த நிலையிலேயே ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் ஒருவரை இலங்கைக்கான தூதுவராக பாகிஸ்தான் அனுப்பவுள்ளது. (அ-2)

# உயிரிழந்த சிறுமி குறித்து விசாரணை

அன்டிபயோட்டிக்ஸ் மருந்து ஏற்றப்பட்டதன் பின்னர் உயிரிழந்த சிறுமி தொடர்பான விசார ணைகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று கராபிட்டிய வைத்தியசாலைக்கு செல்வதாக தேசிய ஔடதங்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

காலி கராபிட்டிய வைத்தியசாலையில் 9 வயது சிறுமியொருவர் அன்டிபயோட்டிக்ஸ் மருந்து ஏற்றப்பட்டதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேடகுழுவொன்று நேற்யைதினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் தலைவர் டாக்டர் ஹேமந்த பெனரகம கூறினார். அன்டிபயோட்டிக்ஸ் மருந்தின் பாவனை நாட்டிலுள்ள சகல வைத்திய சாலைகளிலும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இப்பிரச்சினை தொடர்பில் சுகாதார அமைச்சு இன்றையதினம் அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது. (அ-2)

# நீதிமன்ற விவகாரங்களில் அரசியல் தலையீடுகள்

## ஏற்க முடியாது என்கிறார் அமைச்சர் குரே

(கொழும்பு)

நீதிமன்ற விவகாரங்களில் அரசியல் தலையீடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சில மறைகரங்கள் நீதிமன்ற விவகாரங்களில் அரசியல் தலையீடு செய்வதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றத்திற்கு இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். எனினும் இவற்றை முழுமையான சுயாதீன நிறுவனங்களாக கருதப்பட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதம நீதியரசரை ஜனாதிபதி நியமிப்பதாகவும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் நிதி வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)







பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கலாசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள் அழைத்து வரப்படுவதையும் ஆங்கில பாட விரிவுரையாளர் திருமதி இ.இராமச்சந்திரன் உரையாற்றுவதையும் விரிவுரையாளர்களுடன் ஆங்கில பாட ஆசிரிய மாணவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

251

## உலகம் அழிகிறதா?

முன்னொரு காலத்தில் அடர்ந்த பெரிய காடு ஒன்று இருந்தது. அங்கே ஓரிடத்தில் வில்வமரங்களும் பனை மரங்களும் வளர்ந்திருந்தன.

ஒரு வில்வமரத்தின் கீழே பனங்கன்று இருந்தது.

முயல் ஒன்று அந்த வில்வமரத்தின் நிழலில் படுத்திருந்தது.

உலகம் அழிவதைப்போல அது கனவு கண்டது.

விழித்த அது உலகம் அழிந்தால் எப்படித் தப்பிப்பது? வழியுள்ளதா? என்று கவலைப்பட்டது.

அப்பொழுது வில்வம்பழம் ஒன்று பனை ஓலைகளில் விழுந்தது. தடதடவென்று பேரோசை எழுந்தது.

இதைக்கேட்ட முயல் உலகம் உடைகின்ற பேரோசைதான் இது. உயிர் பிழைக்க ஓடவேண்டும் என்று நினைத்தது.

அலறியபடியே அங்கிருந்து தலைதெறிக்க ஓடத்தொடங்கியது.

அதன் ஓட்டத்தை முயல்கள் பார்த்தன.

என்ன நடந்தது? ஏன் இப்படி ஓடுகிறாய்? என்று அவை கேட்டன.

உலகம் பிளந்து கொண்டே வருகிறது. நான் அதைப் பார்த்தேன். உயிர்பிழைக்கவே ஓடுகிறேன். நீங்களும் உயிர்பிழைக்க நினைத்தால் ஓடுங்கள் என்று ஓடிக்கொண்டே சொன்னது அந்த முயல்.

இதைக்கேட்ட முயல்கள் அஞ்சின. அவையும் உயிர் பிழைக்க நினைத்தன.

அந்த முயலைப்பின் தொடர்ந்தன.எண்ணற்ற முயல்கள் கூட்டமாக ஓடத்தொடங்கின.

முயல்கள் கூட்டம் அலறியபடி ஓடுவதை மான்கள் பார்த்தன.

ஏன் ஓடுகிறீர்கள்? என்று விசாரித்தன.

உலகம் அழிந்து கொண்டே வருகிறது. தப்பிப் பிழைக்க ஓடுகிறோம். உங்களுக்கும் உயிர் மேல் ஆசையிருந்தால் ஓடிவாருங்கள் என்று சொல்லிக் கொண்டே முயல்கள் ஓடின.

மான்கள் கூட்டமும் அவற்றைத் தொடர்ந்து ஓடத் தொடங்கின.

இதைக்கேள்விப்பட்ட நரிகளும் புலிகளும் யானைகளும் நடுங்கின. அவையும் அவற்றைத் தொடர்ந்து கூட்டமாக ஓடத் தொடங்கின.

எங்கும் உலகம் உடைகிறது. தப்பித்து ஓடுங்கள் என்ற குரல் ஒலித்தது.

விலங்குகள் அனைத்தும் கூட்டம் கூட்டமாக ஓடிக்கொண்டிருந்தன. இதனால் காடெங்கும் பேரோசை எழுந்தது.

காட்டு அரசனாகிய சிங்கம் குகைக்குள் தூங்கிக்கொண்டிருந்தது.இந்தப் பேரோசையைக் கேட்டு



விழித்தது அது. எரிச்சலுடன் குகைக்கு வெளியே வந்து பார்த்தது.

எல்லா விலங்குகளும் கூட்டமாக ஓடுவதைப்பார்த்துத் திகைத்தது. ஏன் ஓடுகிறீர்கள்? என்று அவற்றைக் கேட்டது.

உலகம் அழிகிறது. உயிர்பிழைக்க ஓடுகிறோம் என்று நிற்காமல் அவை பதில் தந்தன.

உலகம் அழிய வாய்ப்பேயில்லையே. இவை வீணாக அஞ்சி ஓடுகின்றன. இவற்றின் அச்சத்தைப் போக்கவேண்டும் என்று நினைத்தது சிங்கம்.

காடே அலறுமாறு பயங்கரமாகக் கர்ச்சனை செய்தது அது.

எல்லோரும் நில்லுங்கள் யாராவது ஓடினால் கொன்று தின்பேன் என்று கட்டளை இட்டது.

எல்லா விலங்குகளும் அஞ்சி அப்படியே நின்றன.

உலகம் அழிவதாக யார் சொன்னது? என்று புலிகளைக் கேட்டது அது.

அரசே எங்களுக்கு முன்னால் ஓடுகின்ற யானைகள் சொல்லின.

யானைகளை விசாரித்தது அது.

கரடிகள் சொன்னதாகப் பதில் வந்தது.

கரடிகளை விசாரிக்க அவை நரிகள் சொன்னதாகச் சொல்லின.

இப்படியே ஒவ்வொரு விலங்குக் கூட்டமாக விசாரித்தது அது.

முயல்களே முதலில் சொன்னதாகத் தெரிந்தது.

எந்த முயல் என்றும் அது கண்டுபிடித்தது.

நடுங்கிக்கொண்டிருந்த அந்த முயலைப்பார்த்தது சிங்கம்.

முயலே நீ உலகம் உடைவதைப் பார்த்தாயா ? உண்மையைச் சொல் என்று கேட்டது.

அரசே! நான் வில்வமரத்தின் கீழே படுத்திருந்தேன். அப்போது பயங்கரமான ஓசை கேட்டது.

விழித்த நான் உலகம் உடைவதைப் பார்த்தேன். அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தேன்.

என்னை இந்த விலங்குகள் விசாரித்தன. நானும் நடந்ததைச் சொன்னேன்.



என் பின்னால் இவையெல்லாம் ஓடிவந்தன.

உலகம் அழிவது உண்மைதான். ஓடினால் தப்பித்துக்கொள்ளலாம் நீங்களும் வாருங்கள். நாம் எல்லோரும் இங்கிருந்து ஓடிவிடுவோம் என்று பதற்றத்துடன் சொன்னது முயல்.

சிந்தனையில் ஆழ்ந்த சிங்கம் இந்த முயல் எதையோ பார்த்து அஞ்சியுள்ளது. நாம்தான் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். இவற்றின் அச்சத்தைப் போக்க வேண்டும் என்று நினைத்தது.

முயலே! உலகம் உடைவதை நீ எங்கே பார்த்தாய்? என்னுடன் வா. நாம் அங்கே சென்று பார்ப்போம் என்றது.

நான் அங்கு வரமாட்டேன் என்று நடுக்கத்துடன் சொன்னது முயல்.

நீ என்னுடன் வராவிட்டால் உன்னைக் கொன்று போடுவேன். என் முதுகில் அமர்ந்து வழி காட்டு. உனக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன் என்றது சிங்கம்.

நடுங்கியபடியே முயல் அதன் முதுகில் அமர்ந்தது.

முயல் வழிகாட்ட சிங்கம் புறப்பட்டது.

வில்வமரம் இருந்த இடத்திற்குச் சிங்கத்தை அழைத்துச் சென்றது.

கீழே இறங்கிய முயல் வியப்புடன் அந்த இடத்தைப்பார்த்தது.

இங்கேதான் பயங்கரமான ஓசை கேட்டது. உலகம் உடைவதைப் பார்த்தேன். இப்பொழுது அமைதியாக உள்ளதே. ஒன்றும் புரியவில்லையே என்று குழப்பத்துடன் சொன்னது அது.

என்ன நடந்திருக்கும் என்பதை அறியாமல் சிங்கமும் குழம்பியது.

சிறிது நேரம் சென்றது.

அப்பொழுது வில்வம்பழம் ஒன்று பனை ஓலைகளில் விழுந்தது.பேரோசை எழுந்தது.

அதே பயங்கரமான ஓசை. இப்பொழுதும் கேட்கிறது. வாருங்கள் தப்பித்து ஓடுவோம் என்று அலறியது முயல்.

சிங்கத்திற்கு உண்மை புரிந்தது.முயலே! வில்வம்பழம் ஒன்று பனையோலைகளில் விழுந்தது. அந்த ஓசையைத்தான் நாம் கேட்டோம்.

அதே ஓசையைத்தான் நீ முன்னர் கேட்டிருக்கிறாய். அது வில்வம்பழம் விழுந்த ஓசை. உலகம் உடைகின்ற ஓசை அல்ல. நீ வீணாக அஞ்சியதோடு காட்டையே அலறவைத்து விட்டாயே என்றது அது.

முயலுக்கும் சிறிது சிறிதாக உண்மை புரியத் தொடங்கியது. அது தலை கவிழ்ந்து நின்றது.

முயலை அழைத்துக்கொண்டு விலங்குகள் இருந்த இடத்திற்கு வந்தது சிங்கம். என்ன நடந்தது என்ற உண்மையை அவற்றிடம் சொன்னது.

சிந்திக்காமல் இப்படி நடந்து கொண்டோமே. சிறுமுயல் நம்மைக் கலவரப்படுத்தி விட்டதே என்று எல்லா விலங்குகளும் வருந்தின.

சிங்கத்திற்கு நன்றி சொன்ன அவை அங்கிருந்து சென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் ஆயுதக்கிடங்கு



(மட்டக்களப்பு)

மட்டக்ளப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சத்துருகொண்டான் புகையிரத தண்டவாளத்துக்கு அருகில் ஆயுதக்கிடங்கு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் இதனைக் கண்டு சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் இது மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆயுதக்கிடங்குகளை தோண்டி அதில் மறைத்து வைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களை செயலிழக்கச்செய்யும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களது செயற்பாடுகளுக்காக இந்த வெடிபொருட்களை இங்கு மறைத்து வைத்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் அப்பகுதியில் தேடுதல்களை மேற்கொண்டனர். இது தொடர்பிலான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## அரச தாதியர், துணை மருந்தாளர்

# சொந்த பிரதேசத்தில் பத்து வருடம் பணிபுரிய வேண்டும்

(கொழும்பு)

அரசாங்க தாதியர் சேவைக்கும் துணை மருந்தாளர் சேவைக்கும் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுவர்கள் தொடராக தாம் வாழும் பிரதேசத்தில் பத்து வருடங்கள் சேவையாற்றுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கடமையாற்றுவதைக் கட்டாயப்படுத்தும் வகையில் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதற்கேற்ப அரசாங்க சுகாதாரசேவைக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் தாதியரும் துணை மருந்தாளர்களும் பயிற்சியை முடித்தது முதல் பத்து வருடங்களுக்கு தாம் வாழும் பிரதேசத்திலேயே கடமையாற்ற வேண்டும்.

இவ்விரு பதவிகளுக்கும் சேர்த்துக் கொள்ளப்படுவர்கள் பயிற்சியைப் பூர்த்தி செய்து நியமனம் பெற்ற ஒரு சில மாதங்களுக்குள்ளேயே இடமாற்றம் கோருகின்றனர்.

ஆனால் தற்போதுள்ள ஒழுங்கு விதிகளின் படி இப்பதவிகளுக்கு சேர்க்கப்படுபவர்கள் மூன்று வருடங்களுக்கு ஒரே இடத்தில் கடமையாற்ற வேண்டும்.

இவர்களுக்கு இடமாற்றம் கிடைக்காவிட்டால் ஒன்றில் பதவியை விட்டு செல்லுகிறார்கள், இல்லாவிட்டால் கடமைக்கு சரிவர சமூகமளிக்கிறார்கள் இல்லை. இந்த நிலைமையை நிவர்த்தி செய்யவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ - 2)

# பல்கலைக்கழகத்தில் மேலதிக மாணவர்களை அனுமதிக்க வசதிகளை அதிகரிக்க வேண்டும்

## உபவேந்தர் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மேலதிக மாணவர் சேர்ப்பினால் பல்கலைக்கழக அதிகாரிகள் பாரிய அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அடுத்த மூன்று மாதங்களுக்குள் பல்கலைக்கழகங்களின் வசதிகளை துரிதப்படுத்துவதில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என உபவேந்தர்களின் குழுவின் தலைவர் சுசிர்த மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு பல்கலைக்கழகங்களும் புதிய மாணவர் சேர்ப்பினை 500 தொடக்கம் 600 ஆல் கட்டாயம் அதிகரிக்க வேண்டும்.

எனினும் பல்கலைக்கழகங்களில் தற்போதுள்ள விரிவுரை மண்டபம், விடுதி, தேநீர்சாலை ஆகியவற்றின் வசதிகள் போதாது.

இந்த வசதிகளை அதிகரிப்பதற்கான மானியங்களை அதிகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் இது பாரிய சவாலாக மாறும்.

இதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளோம். இதற்கு தேவையான மேலதிக நிதி வசதிகளை பெறுவதற்காக ஆணைக்குழு திறைசேரியுடன் பேச்சு நடத்துகின்றது.

இன்றும் கூட வரையறையான விடுதி வசதிகளே உண்டு. இதனை முன்னேற்றாவிட்டால் மாணவர் உள்வாங்கல் அதிகரிப்பு மோசமானதாகிவிடும் என தெரிவித்தார். (அ-2)

# ஜனாதிபதி குவைத் நாட்டுக்கு பயணம்

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பிற்பகல் 2.25 மணியளவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விசேட விமானத்தில் குவைத்திற்கு விஜயம் செய்துள்ளார். குவைத்தில் நடைபெறும் ஆசிய கோப்ரேட் டயலொக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குவைத் சென்றுள்ளார்.

இம்மாநாடு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நாளை மறுதினம் புதன்கிழமை வரை நடைபெறும். இந்த விஜயத்தின் போது குவைத்தின் அரச பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதோடு எதிர்வரும் 18 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# நவராத்திரி



வீரத்திற்கதிபதியான துர்க்கையம்மா
நவராத்திரி நன்னாளின் முதல்
நாளே
உன்நாமம் சொல்கிறது
விளைகின்ற மண்ணில் துளிர்கின்ற
குருத்துகளில்
உன் வீரம் என்றும் அடிப்படையே
காலமெல்லாம் மானிடம் நடந்தாலும்
வீரம் எனும் ஆயுதம் இல்லை யேல்
வெற்றி சூனியமாகி விடும்
வாழ்க்கையம்மா இது.....

*நா.ரக்ஷினி*
*தரம்:- 6C*
*யா/இந்து மகளிர் கல்லூரி*

அன்பு மாணவச் செல்வங்களே!
நவராத்திரி பாமாலைக்கு தங்களிடமிருந்து கவிதைகளை எதிர்பார்க்கின்றோம்.
கவிதைகளை

*வலம்புரி,*
*நவராத்திரி பாமாலை,*
*இல .3,2 ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்*

# எரிபொருளுக்கான விலைகள் 10 ரூபாவால் உயர்த்தப்படும்

## ரவி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருளுக்கான விலைகள் எதிர்வரும் நாட்களில் உயர்த்தப்படும் என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

பெற்றோல் மற்றும் டீசலுக்கான விலை குறைந்தபட்சம் 10 ரூபாவினால் விரைவில் உயர்த்தப்படும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலை உயர்த்தப்பட மாட்டாது என முடிந்தால் பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் உறுதியளிக்க முடியுமா என அவர் சவால் விடுத்துள்ளார்.

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை உயர்த்தப்பட்டால் அரசாங்கம் விலைகளை உயர்த்துகின்றது. எரிபொருள் விலை குறைந்தால் அரசாங்கம் விலைகளை குறைப்பதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். பாரியளவில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகளினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தை எதிர்நோக்கி வருவதாக ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# சவால்களை சமாளிக்க இரகசிய கலந்துரையாடல்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு மாநாட்டில் ஏற்படும் சவால்களை சமாளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகி வருகிறது. இந்த மாநாட்டுக்காக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழு ஜெனீவா செல்ல விரும்புவதாக ஏற்கனவே சென்றிருந்தது.

இந் நிலையில் குறித்த குழு ஐக்கிய நாடுகள் சபையில் முகம் கொடுக்கவுள்ள சவால்கள் தொடர்பில் இரகசிய கூட்டம் ஒன்றை நடத்த கலந்துரையாடியுள்ளது.

இதில் மனித உரிமைகள் அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற பல்வேறு அமைப்புக்களின் 30 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள அறிக்கை தொடர்பில் அவர்கள் கலந்துரையாடியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)



கிளிநொச்சி மாவட்ட உளநலப் பிரிவினரால் நடத்தப்பட்ட சர்வதேச உளநல நாள் நிகழ்வு அண்மையில் மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வேள்ட் விசன் அதிகாரி போட்டியில் வெற்றி பெற்றவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Astron

www.astron.lk

**Dedicated to Quality Healthcare Solutions - Since 1956**

# முக்கிய அறிவித்தல்

## கோரெக்ஸ் வியாபாரக் குறி அடங்கிய மருந்துப்பொருட்களின் தற்காலிக விற்பனை நிறுத்தம்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D மருந்துப் பொருட்களின் விற்பனையை நிறுத்துவதற்கு மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு அறிவிக்குமாறு சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் விநியோகப் பிரிவின் இயக்குனர் (D/MT&S) அஸ்ரோன் நிறுவனத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதனால் கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D மருந்துப் பொருட்களை இருப்பில் வைத்துள்ள மற்றும் விற்பனை செய்கின்ற எல்லா மருந்தகங்களும் மறு அறிவித்தல்வரை விற்பனையை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கையினால் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள, பல ஆண்டுகளாக கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D மருந்துகளை நோயாளிகளுக்கு சிபாரிசு செய்து வரும் வைத்திய நிபுணர்களுக்கும் அவற்றினை உபயோகப்படுத்தும் நோயாளிகளுக்கும் எமது ஆழ்ந்த வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

வைத்திய நிபுணர்களுக்கும் மருந்தாளர்களுக்கும் நாம் தெரிவிப்பது என்னவெனில்,

1. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D மருந்துப் பொருட்கள் தடை செய்யப்படவில்லை. சுகாதார அமைச்சினால் அவற்றின் விற்பனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

2. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D என்பன பாதுகாப்பான, நற்பயன் அளிக்கக் கூடிய மற்றும் இலங்கை மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபையினால், பதிவு செய்யப்பட்ட மருத்துவ நிபுணர்களினால் பரந்தளவில் சிபாரிசு செய்யப்படும் மருந்துப் பொருட்களாகும்.

3. கோரெக்ஸ் ஆனது 44 ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன் கோரெக்ஸ்-D ஆனது 34 ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

4. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D என்பன உலக சுகாதார நிறுவனத்தின் நிகழ்கால நல் உற்பத்தி நடைமுறைகளுக்கு (WHO cGMP) அமைய உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

5. சந்தைக்கு அறிமுகப்படுத்திய காலத்தில் இருந்து கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D என்பவற்றின் தரத்தில் குறைபாடோ அல்லது உற்பத்தி சூத்திரத்தில் மாற்றமோ ஏற்படவில்லை.

6. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D ஆகியன பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களால் வழங்கப்படும் மருந்து சிட்டைகளை பயன்படுத்தி, பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள் மூலம் மருந்தக்ங்களில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

7. இவை மருந்து அடங்கிய பெட்டிகளிலும் லேபல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் மட்டுமே உட்கொள்ளப்பட வேண்டும். இதற்காக இவ்விரண்டு மருந்து பொருட்களுடனும் அளவு கரண்டி வழங்கப்பட்டுள்ளது. (கொடுக்கப்படக்கூடிய அதிகூடிய அளவு ஒரு முறைக்கு 5 மி.லீ. (ஒரு தேக்கரண்டி) வீதம் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு முறை).

8. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D இல் எந்தவிதமான மதுசாரமும் சேர்க்கப்படவில்லை.

அஸ்ரோன் நிறுவனமானது அவர்களுக்கெதிராக அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ள எதிர் மறை பிரசாரத்தின் போது தங்களுடன் ஆதரவாகவும், கரிசனையுடனும், புரிந்துணர்வுடனும் இருந்த பின்வருபவர்களுக்கு தமது நன்றிகளை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

1. வைத்திய நிபுணர்கள்
2. பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள்
3. ஸ்ரீ லங்கா மருந்துகள் உற்பத்தியாளர்கள் சங்கம் (SLPMA)
4. ஸ்ரீ லங்கா மருந்துகள் இறக்குமதியாளர்கள் சங்கம் (SLCPI)
5. பொது மக்கள்

அஸ்ரோன் நிறுவனம் முழுமையான இலங்கையர்களின் நிறுவனம் என்பதில் பெருமையடைகின்றது.

உள்ளூர் மருத்துவ சந்தையில் தனது உற்பத்திகளை சந்தைப்படுத்தும், இலங்கையின் மிகப்பெரிய தனியார் மருந்து உற்பத்தி நிறுவனமாக அஸ்ரோன் திகழ்கின்றது.

அஸ்ரோன் நிறுவனமானது பலதரப்பட்ட உயர்ரக தரம் வாய்ந்த மருந்துப் பொருட்கள், போசனை உப உணவுகள் மற்றும் விலங்குநல உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை ஆராய்ச்சி அபிவிருத்தி செய்வதுடன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றையும் செய்து வருகின்றது.

அஸ்ரோன் நிறுவனமானது தரம் வாய்ந்த சுகாதார நல முடிவுகளை வழங்குவதன் மூலம் இலங்கை மக்களின் சுகத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதில் முழுமையாக தன்னை அர்ப்பணித்துள்ளது.

www.ideabase.us

**Astron Limited**, 688, Galle Road, Ratmalana, Sri Lanka. Tel +94 11 2636741 Fax +94 11 2636173 E-mail : astron@astron.lk www.astron.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவம் இல்லாவிட்டால் சுதந்திரம், மக்கள் ஆட்சி என்பதற்கு அர்த்தமே இருக்கமுடியாது.
– நேரு

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இனந்தெரியாத தாக்குதல்கள் இனந்தெரியாமல் போவது எப்போ?

நாட்டில் முன்பிருந்த மிக மோசமான நிலைமை இப்போதில்லை என்பதை சொல்லித்தானாக வேண்டும்.

முன்பெல்லாம் இனந்தெரியாத கொலைகள், ஆட்கடத்தல்கள், பாலியல் வன்முறைகள், கொள்ளைச் சம்பவங்கள் என மிகப்பெரிய அக்கிரமங்கள் தாண்டவமாடின.

இப்போது அவற்றில் பெரும்பகுதி அடங்கியுள்ளதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அதேநேரம் முன்பு கடத்தப்பட்டவர்கள் எங்கே? என்பது இன்றுவரை தெரியாமல் உள்ளது.

முன்பு கைது செய்யப்பட்டவர்கள் விளக்கம், விசாரணை இன்றி சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு அவர்களின் வாழ்வு அழிக்கப்படுகிறது.

வன்னிப் போரின்போது இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த மக்களின் மீள்குடியமர்வு, அவர்களின் வாழ்வாதாரம், என்பவற்றில் காட்டப்படும் தமிழ் இனவாதப் போக்கு இதயத்தைப் பிழிகிறது.

இவைதவிர இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய காணி அபகரிப்பு, தமிழ் மக்களின் இருப்பிடங்களை ஆக்கிரமித்து வைத்திருத்தல், கழிவு ஒயில் அடிக்கும் கலாசாரம், இனந்தெரியாத தாக்குதல் போன்ற சின்னத்தனங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பட்டப்பகலில் நடுவீதியில் வைத்து இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

ஒரு பிரதேச சபைத் தலைவர் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்புடன் வெளிச் செல்லும்போது இனந்தெரியர்த கோலத்தில் அவரைத் தாக்குவதென்பது மிகவும் இழிவான செயலாகும்.

இச்செயல்களை நிறுத்துவது நாட்டில் ஜனநாயக ஆட்சி வலுப்படுவதற்கு வழிவகுக்கும்.

ஒருபுறத்தில் படைத்தரப்பு, மறுபுறத்தில் பொலிஸ் பாதுகாப்பு இப்படியாக இருக்கும்போது இனந்தெரியாதவர்கள் தாக்குவதென்பது இராணுவத்தரப்பிற்கும் பொலிஸ் தரப்பிற்கும் இழுக்கை ஏற்படுத்துவதாகும்.

எனவே இனந்தெரியாத தாக்குதல் உட்பட கழிவு ஒயில் வீசுவது வரையான சம்பவங்களை நிறுத்துவது இலங்கை அரசிற்கு நற்பெயரை ஏற்படுத்தும். நடக்குமா?

## திருட்டு முயற்சி முறியடிப்பு

(சிறுப்பிட்டி)

வயோதிபப் பெண்ணொருவரிடமிடம் தங்கச் சங்கிலி அபகரிக்க முயன்ற போதும் அது பலனளிக்காத நிலையில் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த வயோதிபப் பெண் தனது வீட்டுக்கு நடந்து சென்று கொண்டு இருக்கும்போது அவ் வீதியில் மோட்டார் சைக்கிளுடன் நின்ற இரு திருடர்கள் 2 பவுண் பெறுமதியான தங்கச்சங்கிலியை அறுத்துள்ளனர்.

இதனால் தங்கச்சங்கிலி மூன்று துண்டுகளாக அறுந்து வீழ்ந்தது. பிரஸ்தாப வயோதிபப் பெண் அவலக் குரல் எழுப்பவே திரண்ட மக்கள், திருடரைச் துரத்திச் சென்ற போது திருடர்கள் தலைமறைவாகியுள்ளனர். சங்கிலி அறுந்து வீழ்ந்ததால் திருடர்களின் கைவரிசை கைகூடாமல் போனது. (எ-11)

## ஜனாதிபதி மகிந்த ஆட்சியிலிருக்க நான் உதவிகளை வழங்கினேன்!

### முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருப்பதற்கு தாம் உதவிகளை வழங்கியதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஒப்புக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ஆட்சியில் நீடிப்பதற்கு தாம் உதவிகளை வழங்கியதாக சிலர் குற்றம் சுமத்திவருவதாகவும், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை தொடர்பான வழக்கில் தாம் ஜனாதிபதிக்கு சார்பாக தீர்ப்பளித்தமையினால் ஜனாதிபதி பதவியில் நீடிக்க முடிந்தது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதியை பதவியில் நீடிக்க உதவியளித்தமை உண்மை எனவும் இதன் காரணமாகவே ஜனாதிபதியை பதவி கவிழ்க்க பொதுமக்களிடம் தற்போது தாம் உதவி கோருவதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சில குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பகிரங்க விவாதம் நடத்த தாம் தயார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## கட்டடப் பணிகள் 90 வீதம் பூர்த்தியாகின



(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனத்திற்கு புதிதாக அமைக்கப்பட்டுவரும் கட்டடப் பணிகள் 90 வீதம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லை ஆதீனத்திற்கான புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ளவர்களின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுவரும் ஆதீனத்திற்கான புதிய கட்டடம் கடந்த ஐப்பசி மாதமளவில் திறந்து வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் கட்டடம் அமைப்பதற்கான பணிகள் பூர்த்தியாக்கப்படாததனால் திறப்புவிழா தீர்மானிக்கப்பட்ட திகதியில் நடத்த முடியாமல் போய்விட்டது.

இருப்பினும் தற்போது 90 வீதம் பூர்த்தியாகிவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சிறுவர், முதியோர் தின விழா

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சிறுவர், முதியோர் மாற்றுவலுவுடையோருக்கான விழா நெல்லியடி தடங்கன் புளியடி மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கமும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.நற்குணசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-11,24)

## துப்பாக்கி முனையில் 15 லட்சம் கொள்ளை

உணவட்டுன உல்லாசப் பயணிகள் ஹோட்டலொன்றின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக வங்கியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட 15 இலட்சம் ரூபாய் பணம், மோட்டார் சைக்கிள்களில் வந்த கொள்ளையர்கள் சிலரால் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளொன்றில் இந்தப் பணம் எடுத்துச் செல்லப்பட்ட போது யக்தெஹிமுல்ல பகுதியில் வைத்து வழிமறித்துள்ள மோட்டார் சைக்கிள்கள் இரண்டில் வந்த கொள்ளையர்கள், அதனை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (எ-11)

## அரச மரக்கிளைக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அண்மையில் இந்தியாவின் சாஞ்சி பகுதியில் நாட்டப்பட்ட அரச மரக்கிளைக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் சாஞ்சியில் கடந்த மாதம் ஜனாதிபதியினால் நாட்டப்பட்ட அரச மரக்கிளையைப் பாதுகாப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ரசைன் எனப்படும் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஊழியர் பற்றாக்குறை காரணமாகவே மரக் கிளையை பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (எ-11)

## சுவாமி படத்திற்கு ஏற்றிய விளக்கு வீட்டையே சாம்பலாக்கியது

(முல்லைத்தீவு)

சுவாமி படத்திற்கு ஏற்றிய விளக்கு வீட்டினை சாம்பலாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் இடைக்கட்டு கிராமத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, பெண்மணி ஒருவர் தனது வீட்டில் உள்ள சுவாமி படத்திற்கு விளக்கேற்றி விட்டு அருகில் உள்ள வீடொன்றிற்கு தொலைக்காட்சி பார்ப்பதற்காக தனது பிள்ளைகளுடன் சென்றவேளை விளக்குத் தீப்பற்றி வீடு முழுவதும் தீ பரவியதில் இவ் அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

அத்துடன் கதிரை மேசை வீட்டு உடைமைகள், முக்கிய ஆவணங்கள் உணவுப் பொருட்கள், தையல் இயந்திரம், நீர்ப்பம்பி ஆகிய 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் அழிந்து நாசமாகியுள்ளன.

சம்பவ இடத்திற்கு சென்ற வள்ளிபுனம் இராணுவம் குறித்த குடும்பத்திற்கு உடை, உணவுப் பொருட்கள் என்பவற்றை வழங்கியதுடன் தற்காலிக வீட்டினையும் அமைத்து வருகின்றது.

அத்துடன் புதுக்குடியிருப்பு பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினரால் 5ஆயிரம் ரூபா நிதி உதவியும் இக்குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (அ-3-267)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இறைவனை மட்டுமே சார்ந்திரு!



மனிதத்துணை அனைத்தையும் விட இறைவன் எல்லையற்ற பெருமையை உடையவனாகிறான். இறைவனிடம் நம்பிக்கைகொள். அவரையே எப்போதும் சார்ந்திரு. அப்போது நன்னெறியில் செல்வாய். எதனாலும் உன்னை வெல்லமுடியாது.


இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அவரது உத்தமத் தொண்டர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

பொருளாதார மதிப்பு இருக்கின்ற மதமே வெற்றி பெறும். ஆயிரக்கணக்கான ஒரேவித மதப்பிரிவுகள் ஆதிக்கத்திற்குப் பாடுபடலாம். ஆனால் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பவைகளே ஆதிக்கத்தைப் பெறுகின்றன.

ஒரு இலட்சிய மதத்தின் நோக்கம் இவ்வுலக வாழ்விற்கும் உதவ வேண்டும். மறு உலகிற்கும் வழிகாட்டவேண்டும். அதேவேளையில் இறப்பையும் ஏற்க அது ஒருவனை ஆயத்தம் செய்யவும் வேண்டும்.

மதத்தைப் பற்றிக்கொண்டு சண்டையில் இறங்காதே. மதச் சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையின் அறிகுறி. தூய்மையும் அறிவும் வெளியேறி இதயம் வறளும் போதுதான் சண்டைகள் தொடங்கும். அதற்கு முன்னால் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதைபந்தாட்டம்

தீவக கல்வி வலய பாடசாலைகளுக்கிடை யிலான 18 வயதுப்பிரிவு அணிகளுக்கிடை யிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி அண்மையில் இடம்பெற்றிருந்தது.

முதலாம் இடத்தினை ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரியும் இரண்டாம் இடத்தினை புங்குடுதீவு மகா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தினை வேலணை மத்திய கல்லூரியும் பெற்றுள்ளது.

# ஜனாதிபதி வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்டம்

இலங்கை ஜனாதிபதி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் சகல மாவட்டங்களில் கரப்பந்தாட்டச் சங்கங்களுக்கும் இலங்கை கரப்பந்தாட்டச் சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முதல் சுற்று பிரதேச, செயலக ரீதியாகவும் இரண்டாம் சுற்று மாவட்ட ரீதியாகவும் முன்றாம் சுற்று மாகாண ரீதியாகவும் இறுதிச் சுற்று தேசிய மட்ட ரீதியாகவும் நடைபெறவுள்ளது.



இந்த போட்டிகளில் கலந்து கொள்ளவிரும்பும் கரப்பந்தாட்டச் சங்கங்களுடன் தொடர் கொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்று எதிர்வரும் 30 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது.




கொற்றாவத்தை சிவானந்தா விளையாடடு கழகமும் வடமராட்சி 512 ஆவது இராணுவ படை அணியினரும் இணைந்து நடாத்திய உதைபந்தாட்ட இறுதிப் போட்டி அண்மையில் சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இளவாலை யங்கென்றில் அணிவீரர்களை விருந்தினர்கள் கைலாகு கொடுத்து அறிமுகம் செய்வதையும் சிறப்பு விருந்தினர்க கலந்து கொண்ட வடமராட்சி தெற்கு பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ கலட்டி ஐக்கிய விளையாட்டுகழக அணித்தலைவருக்கு வெற்றிக் கேடயம் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

# முதியோர்களுக்கான விளையாட்டுப்போட்டி



வடமாகாண சமூக சேவை திணைக்களத்தினால் சர்வதேச முதியோர் தினத்தையொட்டி நடத்திய முதியோர் வார நிகழ்வின் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் அண்மையில் கைதடி அரச முதியோர் இல்ல மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.


கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் பிரதம அதிதியாகவும் கணக்காளர் சோ.சிவசுந்தரம், நிர்வாக உத்தியோகத்தர் அ.ஸ்ரீகரன், சமூகசேவை உத்தியோகத்தர் என்.இராஜமனோகரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் முதியோர்களை மகிழ்விக்கும் வண்ணம் இடம்பெற்றிருந்தது. வழமைபோன்று அன்றையதினமும் கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளை பார்வையிடுவதற்காக மாணவர்களும் திணைக்கள உத்தியோகத்தர்களும் வருகை தந்திருந்தார்கள்.

முன்னதாக காலை நிகழ்வாக முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் முதியோர்கள் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட்; மும்பை இந்தியன்ஸை வீழ்த்தியது லயன்ஸ்



மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான இருபது-20 உலகக் கிண்ண தொடரில் தென்னாபிரிக்காவின் ஹைவெல்ட் லயன்ஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

4வது சம்பியன்ஸ் லீக் இருபது -20 கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் பி பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் மும்பை இந்தியன்ஸ் அணி, தென்னாபிரிக்காவின் ஹைவெல்ட் லயன்ஸ் அணியை எதிர்கொண்டது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற லயன்ஸ் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய டிவைன் ஸ்மித் 26 ஓட்டங்களும் சச்சின் டெண்டுல்கர் 16 ஓட்டங்களும் எடுத்து ஆட்ட மிழந்தனர்

அடுத்துக் களமிறங்கிய ரோகித் சர்மா 27 ஓட்டங்களும், மிட்செல் ஜான்சன் 30 ஓட்டங்களும் எடுத்தனர்.

20 ஓவர்கள் முடிவில் மும்பை அணி 6 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்தது. தினேஷ் கார்த்திக் 19 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் இருந்தார்.

இதனையடுத்து 158 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி 18.5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு இலக்கை அடைந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆரம்ப ஆட்டக்காரர்கள் பெரிய அளவில் சோபிக்காவிட்டாலும், 3-வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த காக் -மெக்கென்சி ஜோடி அபாரமாக ஆடி அணியை வெற்றிபெற வைத்தனர்.

ஆட்டமிழக்காமல் காக் 51 ஓட்டங்களும், மெக்கென்சி 12 பவுண்டரிகளுடன் 68 ஓட்டங்களும் எடுத்தனர்.

ஓட்டங்கள் குவித்து வெற்றிக்கு உறுதுணையாக இருந்த லயன்ஸ் அணியின் மெக்கென்சி ஆட்ட நாயகனாகத் தெரிவா னார்.



## ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ்; முர்ரேயை வீழ்த்தி சம்பியனானார் ஜோகோவிச்



ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் முர்ரேயை வீழ்த்தி ஜோகோவிச் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

சீனாவின் ஷாங்காய் நகரில் ஷாங்காய் ரோலர்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் இரண்டாம் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிக்கும், மூன்றாம் நிலை வீரரான பிரிட்டனின் அன்டி முர்ரேயும் மோதினர்.

இதில் மூன்று செட்டுகளாக நடந்த இப் போட்டியில் ஜோகோவிக் 5-7, 7-6 (13-11) மற்றும் 6-3 செட்களில் அன்டி முர்ரேயை வீழ்த்தி ஷாங்காய் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இரண்டு முறை வெற்றிபெற்றிருந்த அன்டி முர்ரே இந்த முறையும் வெற்றிபெற்று ஹட்ரிக் சாதனை புரிவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கடந்த அமெரிக்க ஓபன் போட்டியில் அன்டி முர்ரேயிடம் தோல்வியை தழுவிய ஜோகோவிக் இந்த முறை வெற்றி பெற்று பழி தீர்த்துக் கொண்டார்.



ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் இரட்டையர் பிரிவு பைனலில் இந்தியாவின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஜோடியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக்குடியரசின் ரதக் ஸ்டெபானக் ஜோடி.

## கொரியன் பார்முலா கார்பந்தயம் சம்பியன் பட்டம் வென்றார் வெட்டல்




கொரியன் பார்முலா -1 கிராண்ட்பிரீ கார் பந்தயத்தில் முதலிடம் பெற்று ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டல் சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.

பார்முலா -1 கார்ப்பந்தயப் போட்டி 20 சுற்றுக்கள் கொண்டதாகும். 15 சுற்றுகள் முடிந்துள்ள நிலையில், 16-வது சுற்றான கொரியன் கிராண்ட்பிரீ பந்தயம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

55 சுற்றுகளை கொண்ட (லேப்ஸ்) 308.630 கிலோமீற்றர் பந்தய தூரத்தை ஜேர் மனி வீரர் செபாஸ்டியன் வெட்டல் 1 மணி 36 நிமிடம் 28.651 வினாடியில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார்.

ரெட்புல் அணியின் செபாஸ்டியன் வெட்டல் கடந்த 2 சுற்றிலும் முதலிடம் பிடித்து இருந்தார்.

இதன்மூலம் இந்த ஆண்டில் தொடர்ந்து 3 சுற்றில் முதலிடம் பிடித்து வெட்டல் அசத்தி இருக்கிறார்.

அவுஸ்திரேலிய வீரர் மார்க் வெப்பர் (ரெட் புல்) கூடுதலாக 8.2 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து 2-வது இடம் பிடித்தார்.

முன்னணியில் இருந்துவந்த ஸ்பெயின் வீரர் பெர்ணாண்டோ அலோன்சா (பெராரி) கூடுதலாக 13.9 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து 3-வது இடம் பிடித்தார்.

போர்ஸ் இந்தியா அணி வீரர் நிகோ ஹீல்கென்பெர்ப் 6-வது இடம்பெற்றார்.

சமீபத்தில் 2வது முறையாக ஓய்வுபெறுவதாக அறிவித்த ஜேர்மனியின் மைக்கேல் சூமாக்கர் 13வது இடமே பிடித்தார்.

எச்.ஆர்.டி காஸ்வொர்த் அணிக்காக பங்கேற்றுவரும் இந்திய வீரர் நரேன் கார்த்திகேயன் 20வது இடம்பெற்றார்.

16 சுற்றுகள் முடிவில் ஜேர்மனி வீரர் செபாஸ்டியன் வெட்டல் 215 புள்ளிகளுடன் முன்னிலை பெற்றார்.

ஸ்பெயின் வீரர் பெர்ணாண்டோ அலோன்சா 209 புள்ளிகளுடன் 2வ்து இடத்தில் உள்ளார்.

பார்முலா 1 பந்தயத்தின் அடுத்த சுற்றான இந்தியன் கிராண்ட்பிரீ போட்டி வருகின்ற 28-ம் திகதி டில்லி புறநகர்ப் பகுதியில் உள்ள புத் சர்வதேச சர்க்யூட்டில் நடைபெறவுள்ளது.



[illegible] ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு [illegible] கெய்-செனை வீழ்த்தி கோப்பை வென்ற இங்கிலாந்து வீராங்கனை ஹீதர் வாட்சன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத் தரப்பு வாத...

வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியை, இன்னும் அமைக்கப்படாதுள்ளவடக்குமாகாண சபையின் சம்மதமாக கருதமுடியாது என்பதால், திவிநெகும சட்டமூலத்துக்கு அவர் அளித்த அனுமதியை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழக்குத் தாக்கல் செய்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த விவகாரம் அரசியலமைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதால் அதனை உச்ச நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்க உத்தரவிட்டி ருந்தது.

இந்த மனு நேற்றுத் திங்கட்கிழமை உச்ச நீதிமன்றத்துக்கு வந்தபோது ஆட்சேபனையொன்றை முன்வைத்த அரச தரப்புச் சட்டத்தரணி, இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் விளக்கம் அளிக்க வேண்டிய பகுதிகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் தெளிவாகக் கூறாதபடியால், விசாரணையை நடத்தும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு இல்லை என்று வாதிட்டார்.

ஆனால் இந்த மனு மீதான விசாரணையை தொடர்ந்தும் நடத்துவதற்கு உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்று மனுதாரர் தரப்புச் சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

அரச தரப்பு வாதத்தை நிராகரித்த தலைமை நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த வழக்கு விசாரணையை தொடர்ந்தும் நடத்துவதற்கான உத்தரவை வழங்கியது. அதன்படி, இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் 22-ம் திகதி நடக்கவுள்ளது. (எ-11)

## பாக் தூது...

டுள்ளது. இலங்கையில் தற்போது பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகராக உள்ள சீமா இலாஹி பாலோச்சிற்கு அடுத்த மாதம் முதல் ஓய்வு வழங்கப்படவுள்ளது.

அதன்பின்னர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப் படுவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே பாகிஸ்தானில் இலங்கை உயர் ஸ்தானிகரகம் தென்னிந்தியா குறித்த தகவல்களை திரட்டி வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (எ-11)

## இலங்கை மீது பொரு..

பிரதமரிடமிருந்து தனக்கு எந்தப்பதில்களும் வராத நிலையில் இந்தியா இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படப் போவதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் தனக்கு கவலையளிப்பதாக தெரிவித்துள்ள ஜெயலலிதா, கடந்த சில நாட்களின் முன்பாக ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று பிரதமருக்கு தான் எழுதிய கடிதத்தை மீண்டும் நினைவுபடுத்துவதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் அப்பாவி ஈழத்தமிழர்களை ஈவு இரக்கமின்றி இலங்கை அரசு படுகொலை செய்துள்ளமையை சுட்டிக்காட்டிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, தமிழ்நாடு சட்டமன்றத்தில் இலங்கை அரசுக்கு எதிராக போர்க் குற்ற விசாரணையை நடத்த வேண்டும் என்றும் இந்தியா பொருளாதார உறவைத் துண்டிக்க வேண்டும் என்றும் தீர்மானங்களை ஏக மனதோடு நிறைவேற்றியதைச் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் சிங்களவர்களுக்கு நிகராக தமிழர்களுக்கும் அரசியல் உரிமைகள் சமமாக வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமரிடம் நேரில் கேட்டுக் கொண்டதையும் நினைவுபடுத்திய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, ஈழத்தமிழர்கள் உரிமைகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதங்களின் விபரங்கள் அனைத்தையும் நினைவுபடுத்தினார். (எ-11)

## தமிழகத்தில்...

இந்திய மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இதனையேற்ற சிவ்சங்கர் மேனன் இது தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துடனும் தமிழ் நாட்டு அரசாங்க அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதாக உறுதியளித்துள்ளார். (எ-11)

## தாக்குதலை...

எதிராக ப.வசந்தகுமார் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருந்தார்.

இந் நிலையிலேயே நேற்றுமுன்தினம் அவர் தாக்குதலுக்கு உட்பட்டார். மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத சிலர் அவர் மீது தாக்குதல் நடத்தி தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் காவல் துறையிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரதேச சபைத் தலைவர் தொடர்ந்தும் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எ-11)


### இலவச உயர்கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

**உலகில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள்**

- ▶▶ வைத்தியர்
- ▶▶ வர்த்தக முகாமையாளர்
- ▶▶ பொறியியலாளர்
- ▶▶ கணக்காளர்
- ▶▶ தகவல்தொழில்நுட்ப முகாமையாளர்
- ▶▶ உளவியல் நிபுணர்

தொடர்பு கொள்ளவும்: 0777570498

(சி-1318)

**யாழ்ப்பாணம்**
2012 ஒக்ரோபர் 20ம் திகதி -சனிக்கிழமை
யாழ்ப்பாணம் பிள்ளையார் innஇல்
காலை 10.30 மணிக்கு

**வவுனியா**
2012 ஒக்ரோபர் 21ம் திகதி -ஞாயிற்றுக்கிழமை
வவுனியா கலாசார மண்டபத்தில்
காலை 10.30 மணிக்கு

கல்வி பயிலுங்கள்
அமெரிக்கா, லண்டன், கனடா, மலேசியா, ஐரோப்பா, நேபாளம் மற்றும் பல நாடுகளில்

### MOBILE PHONE REPAIRING COURSE



நீங்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா? வேலைசெய்து கொண்டு பகுதி நேரமாக வருமாணம் ஈட்ட வேண்டுமா?

Free: Toolkit, The Guide to Success Book, 1000 Secrets DVD CD

உங்கள் எதிர்காலத்திற்கு......
மாதம் 150,000/-க்கு மேல் வருமானம்
பெறும் நிரந்தர தொழில் வாய்ப்பு
சர்வதேச தரத்திலான டிப்ளோமா சான்றிதல்

திருத்தும்துறையில் பத்து வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000 க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதல்தர ஆசிரியர்

**Ganesh.K**

கட்டணம் 9500/=

- ☐ பாடநெறிக்கு செலுத்திய கட்டனத்தை முதல் மாதத்திலே சம்பாதித்துகொள்ள முடியுமா முதலீடு
- ☐ நவீனமான *MOBILE* போன் *REPAIR* பன்னும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
- ☐ மிககுறைந்த செலவில் மிக சிறிய இடத்தில் மிக குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கக்கூடிய ஒரு சிறந்த சுயதொழில்

(சி-1315)

*4 Days Course* 5 வது நாளில் தொழிலை ஆரம்பிக்க உங்களுக்கு 100% நாங்கள் உத்தரவாதம் வழங்குவோம்.

பதிவுகளுக்கு விரையுங்கள்

| 27வது பிரிவு வவுனியாவில் ஆரம்பம் | 14வது பிரிவு யாழ்பாணத்தில்ஆரம்பம் |
|---|---|
| 19,20,21,22, October 2012 | 25,26,27,28 October 2012 |
| SUN BRITISH COLLEGE | IISEEES NALLUR CAMPUS |
| No:-26, Station Road, Vavuniya. | No:-762, Point Petro road, Nallur,Jaffna. |
| T.P:-0770 58 46 58, 024 2226649 | T.P:-0770 58 46 58, 021 2224728 |

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

Learn French The French Way

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட ,சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய "Alliance Francaise de Jaffna" ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்குச் செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம். ஆறுமாத கற்கை நெறியின் முடிவில் தரமான Certificate வழங்கப் படுகிறது.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.....

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

61,Kachcheri- Nallur Road,Jaffna. Phone- 021 222 8093

E-mail: alliancejaffna@yahoo.com

(முக்கா வீதியும் கச்சேரி- நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)

(759)


## நல்லூர் பிர...

பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் இரும்புக்கம்பியினால் தாக்குதல் மேற்கொண்டதோடு அவரிடம் இருந்த பணம் மற்றும் முக்கிய ஆவணங்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

திருநெல்வேலியில் நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் ஆக்கிரமித்ததற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் நேற்று இந்த கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் தமது கைகளில் எதிர்ப்பு சுலோகங்களையும் தாங்கி நின்றனர்.

அதில், "நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் தாக்கப்பட்டது ஜனநாயகத்திற்கு பேரிடி", "தவிசாளர் தாக்கப்பட்டது நீதியா? இதுதான் ஜனநாயகமா?", "அரசே உனது காட்டுமிராண்டித் தனத்திற்கு எல்லை இல்லையா?", "நல்லூர் பிரதேசசபைத் தலைவரின் பாதுகாப்பை அரசே உறுதிப்படுத்து போன்ற பதாகைகளை தாங்கி நின்றனர்.

நேற்று முற்பகல் 9.15 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் எதிர்க் கட்சி, ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பங்கு கொண்டிருந்தனர்.

இதில் கருத்துரை வழங்கிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எமது சபைத்தவிசாளர் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டமையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் மீதான தாக்குதலைக் கண்டித்து பல தரப்பட்டவர்களும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## எரிக் சொல்...

கும் சென்று இந்திய அதிகாரிகளுக்கும் பேச்சுவார்த்தை தொடர்பில் விளக்கமளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


### கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

அதி உயர் சம்பளம் (சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்)

கீழ்க் காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

- I. எலக்ரீசியன் (Electrician)
- II. பிளம்பர் (Plumber)
- III. காப்பென்ரர் (Carpenter)
- IV. மேசன் (Mason)

இரண்டே வாரத்தில் பயணமாகலாம்
உடன் தொடர்பு கொள்ளவும்

Lanka Voice 24, Station Road, Vavuniya. 0750650084

(C-1315)

### வேலை வாய்ப்பு

உலகளாவிய ரீதியில் தனது கிளைகளைப் பரப்பிக் கொண்டிருக் கும் OPTIMO நிறுவனம் தன் புதிய கிளைகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் திறக்கவுள்ளதால் புதிய அலுவலர்களை பயிற்சி கொடுத்து (6 மாத காலம்) எடுக்க முன்வந்துள்ளது. பயிற்சியின் போது உங்கள் திறமைக்கேற்ப வேதனம் ரூ.8000க்கு குறையாமல் எடுப்பதுடன், பயிற்சி முடிவில் ரூ.35,000 சம்பளத் துடன் வேலை யாழ்.நகரிலும், கிளிநொச்சியிலும் வழங்கப்படும். முந்தும் 20 பேருக்கு தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

அழைக்க வேண்டிய இலக்கம் : 0772151014, 0771518168, 0217212045

குறிப்பு:-30வயதிற்கு மேற்படாமல் இருத்தல்வேண்டும்.

கல்வித்தகைமை:- O/L, A/L இலிருந்து எதிர்பார்க்கப்படுவர். (763)

### இன்று தொடக்கம் மாபெரும் தீபாவளிச் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

**காவேரி சில்க்ஸ்**



20% முதல் 50 % வரை உங்கள் மனதிற்குப்பிடித்த...

- ✠பட்டுச்சேலைகள்
- ✠சுடிதார் வகைகள்
- ✠அனைத்துரக வண்ணச் சேலைகள்
- ✠பஞ்சாபித் துணிகள்



சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற றெடிமேட் உடுப்புகள்...

- ✠சூட்டிங் வகைகள்
- ✠விதம் விதமான சேட் ரகங்கள்



இன்னும் பல... பல... பல விசேட கிலைக்கழிவில் அள்ளிக்கொள்ள

**காவேரி சில்க்ஸ்**

48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.



T.P.: 021 222 2333

மலிவு... மலிவு... மலிவு...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org